Registered as a NewsPaper

6 MAR 2005

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-22 06-03-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை -16

S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247 (சி-11455)

## அரசியல்துறைப் பொறுப்பாளருடன் நோர்வேத் தூதுவர் சந்திப்பு

நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் கான்ஸ் பிரஸ்கர் நேற்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுக் காலை10 மணியளவில் விசேட உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களை சந்தித்துக்கலந்துரையாடியுள்ளார். இதில் தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள், தமிழீழ சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

இது தொடர்பாக நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிரஸ்கர் தெரிவிக்கையில், நாம் பல விடயங்களைக் கலந்தாலோசித்தோம். கடந்த சில நாட்களில், கிழமைகளில் வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெற்ற கலவரங்கள் பற்றித் தீவிர கவனம் செலுத்தினோம். நாம் இந்தப் பதற்ற நிலையைக் குறைக்க வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றோம். ஏனெனில் இவை சொத்து உயிர் இழப்பிற்கு வழியேற்படுத்துகின்றது.

*. நீங்கள் அரசிடமிருந்து ஏதாவது தகவல்

(12ஆம் பக்ககம் பார்க்க)



### - மாணவியைப் பலிகொண்ட சம்பவம் -

# சாதாரண விபத்து என்றவகையில் அதனை அடக்கி விடுதல் முடியாது

## பின்னாலுள்ள பிரச்சினைகள் களையப்படவேண்டும் படைத்துறையுடனான சந்திப்பில் புலிகள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**"நேற்று முன்தினம் மாணவி பலியான சம்பவத்தை விபத்து என்ற வரையறைக்குள் வைத்துப் பார்க்க முடியாது. இதன் பின்னான பிரச்சினைகள் களையப்படவேண்டும்" என நேற்று சிறிலங்கா ஆயுதப்படையினருடனான சந்திப்பின் போது யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வலியுறுத்தினார். இச்சந்திப்பில் நேற்று முன்தினச் சம்பவம் தொடர்பாக ஆயுதப்படையினரும், பொலிசாரும் நடந்து கொண்ட விதம் தொடர்பாக பலத்த கண்டனத்தைத் தெரித்தார்.**

மேலும் இச்சந்திப்புக் குறித்து இளம்பரிதி மேலும் தெரிவிக்கையில், நடந்த விபத்து சம்பவத்தை விபத்து என்ற வரையறைக்குள் வைத்துப்பார்க்க முடியாது. ஏனெனில் இலங்கைத் தீவின் எல்லா இடங்களிலும் இராணுவத்தின் காவலரண்களும், இராணுவ வாகனங்களின் போக்குவரத்துக்களும் நடைபெறுகின்றன.

ஆனால் அங்கு மக்களைப் பலியெடுக்கின்ற விபத்துக்கள் நடைபெறுகின்ற விதத்தையும் விட குடாநாட்டில் தொடர்ச்சியாக இராணுவ வாகனங்களினால் அநேகமாக மக்களும், மாணவர்

(12ஆம் பக்ககம் பார்க்க)

## விபத்தில் சாவடைந்த மாணவியின் இறுதிக் கிரியைகள் நேற்று

போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்ற இராணுவ வாகன விபத்தில் உயிரிழந்த வேம்படி உயர்தரப் பாடசாலை மாணவி நாகேந்திரம் துளசிகாவின் பூதவுடல் நேற்று மாலை அடக்கஞ் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.ஐந்து சந்திப் பகுதியிலுள்ள குறித்த மாணவியின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த மாணவியின் பூதவுடலிற்கு சக மாணவிகள், ஆசிரியைகள் மற்றும் ஏனைய பாடசாலை மாணவர்கள், கல்விச் சமூகம், பொதுமக்களென ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர்.

பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற இறுதி அஞ்சலி நிகழ்வினில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர். சி.இளம்பரிதி

(12ஆம் பக்ககம் பார்க்க)

## வடபகுதி முஸ்லிம் மதகுருமார் சங்கம் புலிகளுடன் நேற்றுச் சந்திப்பு

வடபகுதி முஸ்லிம் மதகுருமார் சங்கத்தினர் நேற்று தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளரைச் சந்தித்துக் கலந்துரையாடலொன்றை நடத்தினர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த தமிழர் தாயகப் பகுதிகளை பார்வையிடுவதற்காகவும், தமிழ் முஸ்லிம் மக்களின் நல்லெண்ண உறவுகளை பேணும் வகையிலும் நேற்று வன்னிக்கு வருகை தந்த வடபகுதி முஸ்லிம் மதகுருமார் சங்கத்தி

(12ஆம் பக்ககம் பார்க்க)



## புல்மோட்டை முஸ்லிம் மையவாடியில் மண்டை ஓடுகளை தோண்டி எடுத்தபடையினர்

### - ஆத்திரமடைந்த மக்கள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலைக்கு வடக்கே புல்மோட்டைக் கிராமத்தில் இல்மனைட் தொழிற்சாலைக்கு அருகில் உள்ள முஸ்லிம் மையவாடிக்குள் படையினர் சிலர் பிரவேசித்து நிலத்தைத் தோண்டி புதைக்கப்பட்ட மனித சடலங்களின் மண்டை ஓடு மற்றும் எச்சங்களை அகற்றிக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று பற்றி தகவல் வெளியானதை அடுத்து, புல்மோட்டை கிராமத்தில் நேற்று பதற்றம் நிலவியது . ஆத்திரமடைந்த கிராமவாசிகள் நூற்றுக்கணக்கில் மையவாடிப் பிரதேசத்தைச் சுற்றிவளைத்து நின்ற வண்ணம் இச் சம்பவத்துக்குப் பொறுப்பானவர்கள் மீது கடும் நடவடிக்கை

(12ஆம் பக்ககம் பார்க்க)

## படையினர் தேடுதல்

பொலநறுவை மாவட்டத்தில் வெலிக்கந்தப் பகுதியில் சிறிலங்கா படையினர் திடீர் சோதனை நடவடிக்கை ஒன்றை நேற்று மேற்கொண்டுள்ளனர்.

காலை 10.00 மணியளவில ஆரம்பிக்கப்பட்ட இந்த தேடுதல் நடவடிக்கை மாலை வரை தொடர்ந்து

(12ஆம் பக்ககம் பார்க்க)

## ஐ.ஒ வெளிவிவகார ஆணையாளர் எட்டாம் திகதி இலங்கைக்கு விஜயம்

### - கிளிநொச்சிக்கு வருகை தருவார்

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார உறவுகள் மற்றும் ஐரோப்பிய அயல் நாட்டு உறவுகளுக்கான ஆணையாளர் பினிற்றா பெரிரோ வோல்ட்ர் எதிர்வரும் எட்டாம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இவர் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப்புலிகளுடன் சந்திப்

(12ஆம் பக்ககம் பார்க்க)

## மாகாண கல்வி அமைச்சு உயர் அதிகாரிகள் மட்டக்களப்பில் புலிகளுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு மாகாண கல்வியமைச்சின் உயர் அதிகாரிகளுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்றுக்காலை 11.00 மணியளவில் கொக்கட்டிச்சோலை மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றது. இச்சந்திப்பில் வடகிழக்கு மகாண கல்வியமைச்சின் திட்டமிடல் பொறுப்பாளர், மாகாணக் கல்வியமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர், வலயக்கல்விப்

(12ஆம் பக்ககம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

பரந்தன்-பூநகரி வீதியின் தெற்குப் புறமாக (பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் அண்மையில்) நீர்ப்பாசன வசதியுடன் கூடிய 4 1/2 ஏக்கர் வயல்க்காணி விற்பனைக்குண்டு அரிசிஆலை,வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கு வாய்ப்பானது.தொடர்புT.P:- 0112508992,021-2285092 . (5758)


### -பூநகரி கோட்டத்தில் உள்ள-

# தண்ணாவில் பாடசாலைக்கு தமிழீழ மாணவர் அமைப்பு உதவி

(அலுவலகசெய்தியாளர்)

தண்ணாவில் அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு தமிழீழ மாணவர் அமைப்பினரால் நில விரிப்புக்களும், பாய்களும் வழங்கப்பட்டன.

தளபாட வசதிகள் அற்ற நிலையில் நிலத்தில் இருந்து கொண்டே கல்வி கற்கும் கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட தண்ணாவில் அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு தமிழீழ மாணவர் அமைப்பினரால் மேற்படி பொருட்கள் வழங்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் கடந்த வியாழக்கிழமை இப்பொருட்களை கிளிநொச்சி தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் எழிலன்பன் அவர்கள் கையளித்தார். மேற்படி பாடசாலையானது பூநகரி கல்விக் கோட்டத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (தீ)

# விவசாயத் தெருவெளி நாடகம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சேதனப்பசளையின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தும் தெருவெளி நாடக நிகழ்வு இடம் பெற்றது.



முல்லை மாவட்ட விவசாயத் திணைக்களமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து இந்த நாடக நிகழ்வினை நடத்தி வரு கின்றன. வைக்கோலினை எரித்து வீணாக்காமல் அதனை சேதனைப் பசளையாகப் பயன்படுத்தல் தொடர்பாக இந்த தெருவெளி நாடகத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது. (05)

# இருவரைக் காணவில்லை



பதுளையைச் சொந்த முகவரியாகவும் செல்வபுரம் திருமுறிகண்டியைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட ஆறுமுகம் குமாராஜா அல்லது ராஜா என்பவர் கடந்த 02.03.2005 ஆம் நாள் முதல் திருமுறிகண்டியில் இருந்து காணமால் போயுள்ளார். இவர் செல்லும் போது நீலக் கோடு போட்ட வெள்ளை நிற சாரமும் கறுப்புக் கோடு போட்ட மஞ்சள் நிற சேட்டும் அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கிளிநொச்சி காவல் பணிமனையினருடன் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி காவல் பணி மனையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இலக்கம் 337,உதயநகர் கிழக்கு கிளிநொச்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கனகலிங்கம், வயது 46,,என்பவர் கடந்த 18.02.2005 ஆம் நாள் முதல் காணாமல் போயுள்ளார். இவர் தொடர்பாக தகவல் அறிந்தவர்களை கிளிநொச்சி காவல் பணிமனையினருடன் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி காவல் பணிமனையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

## சாவு அறிவித்தல்



### பொன்னம்பலம்-கைலாயபிள்ளை

### பலாலி கிழக்கு

பலாலி கிழக்கு (ஐயர் வீட்டடி) பொன்னம்பலம் கைலாயபிள்ளை அவர்கள் சனிக்கிழமை (05.03.2005) அன்று இறைபதமடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் சின்னப்பிள்ளையின் மகனும், காமாட்சிப்பிள்ளையின் அன்புக்கணவரும், உதயகுமார் (சுவிஸ்) மைதினி (ஜேர்மனி), உதயகாந்தன் (சுவிஸ்), ஜெயகாந்தன் (போராளி அன்பழகன்), ஜெயந்தி (சுவிஸ்), கேமகுமார்(சுவிஸ்), ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவா (சுவிஸ்), ரவீந்திரன் (ஜேர்மனி), கலா(சுவிஸ்), கலைவாணி (போராளி தமிழ்நிலா) ஜெயமோகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனகன், அருண், ஆரூரன், பிரணவி, பிருந்தவி, வைஷ்ணவி, சுடரினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல:67 உதயநகர் மேற்கில் (30 வீட்டுத்திட்ட அருகாமையில்) உள்ள அன்னாரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக (07.03.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் ஆகிய எல்லோருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
கை.ஜெயகாந்தன் (மகன்)
(போராளி அன்பழகன்)

(5771)

## வணிகர் கழகம் உதவி வழங்கல்

(புங்குடுதீவு)

யாழ்.வணிகர் கழகத்தினரால் புங்குடுதீவு பொது வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி வைத்திய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ் வைத்தியசாலையின் வசதியீனங்களைக்கவனத்தில் கொண்டே இவ் உபகரணங்களை வணிகர் கழகம் வழங்கியுள்ளது.

இவ் வைத்தியசாலைக்குச் சென்ற வணிகர் கழக உறுப்பினர்கள் வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் இவற்றை கையளித்துள்ளனர். (33)

### ஆட்டைக் கொன்ற சிறுவன்

(பருத்தித்துறை)

உடைந்த போத்தலால் ஆட்டினை குத்திக் கொன்று இறைச்சி எடுத்த சிறுவனை பொதுமக்கள் கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளனர்.

இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை சிவன் கோவிலடிப் பகுதியில் இடம்பெற்றது. (கா)


## குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபத்தின் வாடிக்கையாளர் கவனத்திற்கு

வாடிக்கையாளர் அட்டையில் பதிவினை மேற்கொள்ளாது வைத்திருக்கும் அனைவரும் 10-03-2005 இற்கு முன்னதாக பதிவினை மேற்கொண்டு உங்கள் பரிசினை உறுதிப்படுத்தும் வண்ணம் வேண்டப்படுகிறீர்கள்.
எமது பரிசளிப்பு நிகழ்வு 20-03-2005 அன்று கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

**குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்.**
(சி-11460) **யாழ்சாலை, கிளிநொச்சி.**

## வேலைவாய்ப்பு

டோகா, கட்டார்,டுபாய் மற்றும் சவூதி அரேபியா நாடுகளில் உடனடி வேலை வாய்ப்பு
35000/= இற்கும் மேலான கொடுப்பனவுடன் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

I மேசன்
II சாரதி
III மின் இணைப்பாளர்.
IV நீர்க்குழாய் இணைப்பாளர்.
V இயந்திர திருத்துனர்

தகுதி உடையோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
மேலும் மக்கள் வங்கிக் கடன் உதவியுடன் அனுப்பி வைக்கப்படும் விசாக்கள் கையிருப்பு உள்ள வரை மட்டுமே.

தொடர்புகளுக்கு

தொ.பே.இல- 0779027836

அராளிய இன்டர் நசினல் பிறைவேட் லிமிட்டெட்டின் ஏகமுகவர்
த.மதன்,
இல.136, குமரபுரம்,
பரந்தன், கிளிநொச்சி.
(5770)

## "மனம் திருந்தி நற்செய்தியை நம்புங்கள்"

மட்டக்களப்பு, தேற்றாதீவிலிருந்து வருகை தரும்

**அருட்திரு போல் றொபின்சன் அடிகளாரின்**

வழிநடத்தலில்

**மாபெரும் இறைத்தியான குணமாக்கல் வழிபாடுகள்**

07-03-2005 திங்கள் - மாலை 5.30 மணி- 10-00 மணிவரை
- கிளிநொச்சி புனித திரேசாள் ஆலய முன்றில்

08.03.2005 செவ்வாய் - காலை 8.30 மணிக்கு
- விசுவமடு புனித பேதுரு ஆலய முன்றில்

08.03.2005 செவ்வாய் - மாலை 5.30 மணி -10.00 மணிவரை
- புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலய திடலில்

உடல், உள அமைதி பெற்று இறை அனுபவம் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
-இறை தியான குழுவினர்- (5769) -ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்

# இராணுவ அராஜகத்தை ஆட்சேபித்து; பொது அமைப்புக்கள் கண்டனக் கணை!

(யாழ்ப்பாணம்)

**யாழ். நகரப் பகுதியில் நேற்று முன்தினம் காலை இராணுவத்தினர் பயணம் செய்த உழவு இயந்திரம் மோதி வேம்படி மகளிர் கல்லூரி மாணவி பலியானதையும், அதனை அடுத்து இராணுவத்தினர் நடத்திய அடாவடித்தனங்களை கண்டித்தும் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களும், மாணவர் அமைப்புக்களும் தமது காட்டமான அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.**

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தமிழ் மாணவர் ஒன்றியம், யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் உட்பட பல அமைப்புக்களும் தமது அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

## தமிழர் பலியெடுப்பு நாடகம் மீண்டும் அரங்கேற்றம்

*சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை*

தமிழர்களை பலியெடுக்கும் நாடகத்தினை சிறிலங்கா இராணுவம் மீண்டும் அரங்கேற்றியுள்ளது. சிறிலங்கா இராணுவத்தின் திட்டமிட்ட பலியெடுப்பில் பாடசாலை மாணவி இராணுவ வாகனத்தால் மோதிக் கொல்லப்பட்டார். சிறிலங்கா இராணுவத்தினரின் இக் கொடூரத்தைப் பொறுக்க முடியாத மக்களும், மாணவர்களும் இராணுவத்திற்கு எதிரான பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதற்கு முகங்கொடுக்க முடியாத இராணுவமும், பொலிசாரும் உயர்கல்வி நிறுவனங்களிற்கு தனது சேவையினை வழங்கி வரும் எமது நிறுவனமான "சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின்" அலுவலகத்திற்குள்ளும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அவர்களின் அலுவலகத்திற்குள்ளும் அத்துமீறி நுழைந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், எமது அலுவலகப் பணியாளர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் எமது பணியாளர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

அத்துடன் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இருபதிற்கும் மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகள், பத்து உந்துருளிகள் என்பனவற்றை அடித்துச் சேதப்படுத்தியதுடன் அவற்றில் சிலவற்றை எடுத்தும் சென்றனர்.

கடந்த 2004ஆம் ஆண்டும் மாவீரர் நாளன்று இராணுவத்தினரும், பொலிசாரும் எமது நிறுவனத்தில் அத்துமீறி நுழைந்து தாக்கியமையும் குறிப்பிடத்தக்கது. சம்பவம் நடந்த இடத்திலிருந்து குறிப்பிட்ட தூரத்தில் இருந்த எமது நிறுவனத்தின் மீது எந்தவித தொடர்பும் இல்லாமல் திட்டமிட்டு வேண்டுமென்றே சிறிலங்கா இராணுவமும், பொலிசாரும் தமது அராஜகத்தை அரங்கேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான சிறிலங்கா இராணுவத்தினரதும், பொலிசாரினதும் அத்து மீறிய செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதுடன் சிறிலங்கா இராணுவத்தின் திட்டமிட்ட நடவடிக்கையால் பாடசாலை மாணவி உட்பட வயோதிபரும் கொல்லப்பட்டமைக்கு எமது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## இராணுவக் காடையர்களை மக்களே வெளியேற்றுவர்

*தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம்*

இராணுவ வாகன விபத்துக்கள் தொடர்ச்சியாக யாழ். குடாநாட்டில் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவது எல்லோரும் அறிந்ததே.ஆத்திரம் கொண்ட மக்கள், மாணவர்கள் கொதிப்படைந்து இராணுவ வாகனங்களையும், இராணுவக் காவலரண்களையும் தாக்கியளித்தனர். இவ்வாறான இராணுவத்தினரின் படுகொலைகள் தொடருமானால் ஆயுதமின்றியே இராணுவக் காடையர்களை இங்கிருந்து மக்களே வெளியேற்றுவதை யாராலும் தடுக்க முடியாது.

## மாணவரை பழிதீர்க்கும் அடக்குமுறைச் சிந்தனை

*பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்*

இராணுவ அராஜகத்தினையே சிறிலங்கா இராணுவம் அரங்கேற்றியுள்ளது.

எமது பல்கலைக்கழக மாணவர்கள் மீது குறிவைத்து எமது மாணவர்களை பழிதீர்க்கும் எண்ணத்துடன் பரமேஸ்வரா வீதியில் இராணுவ அடக்கு முறை சிந்தனையினை வெளிக்கொணர்ந்துள்ளது.

பரமேஸ்வராச் சந்தியிலுள்ள உயர் கல்வி மாணவர்களின் நலனை மேம்படுத்துவதற்காக சேவையாற்றி வரும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் மீதும், பரமேஸ்வராச் சந்தியில் இயங்கிய பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் அவர்களின் அலுவலகத்தின் மீதும், பேரவை உறுப்பினர் மீதும் தனது சிங்களக் காடைத் தனத்தினை இராணுவமும், காவல் துறையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

நீண்ட காலமாக பல்கலைக்கழக மாணவர்களையும் அவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உந்து சக்தியாக இருந்து உழைத்து வரும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் செயற்பாட்டினையும் நசுக்க வேண்டும் என்பதில் சிறிலங்கா இராணுவத்தினர் கங்கணம் கட்டி இருக்கின்றனர். இதன் தொடர்ச்சியான செயற்பாடாகவே இராணுவத்தின் இவ் அத்து மீறிய செயற்பாட்டை நாம் கருத வேண்டியுள்ளது.

## போராடும் சூழ்நிலைக்கு வலிந்து தள்ளப்படுவோம்

*தமிழ் மாணவர் ஒன்றியம்*

மாணவியின் மரணத்தைத் தொடர்ந்து நிகழ்ந்த சம்பவங்களில் பாடசாலை மாணவர்கள் இராணுவத்தினராலும், பொலிசாராலும் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இந்தத் தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் படுகாயமடைந்ததுடன், பல மாணவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து பாடசாலை வளாகத்தினுள் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி மாணவர்களை பாடசாலையை விட்டு வெளியேற விடாது தடுத்ததுடன் வெளியேறிய மாணவர்களை ஆயுதங்கள் கொண்டு கடுமையாகத் தாக்கியமையானது மிகவும் பாரதூரமான நடவடிக்கைகளாகவே நாம் கருதுகின்றோம். எனவே நாங்கள் போராட வேண்டிய சூழ் நிலைக்கு வலிந்து தள்ளப்படுவோம்.

## நகரப்பகுதிகள் இராணுவ மயமற்ற பிரதேசமாக வேண்டும்.

*யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்*

இராணுவ வாகனத்தின் கோரத் தாக்குதலுக்குப் பலியான பாடசாலை மாணவியின் மரணத்தால் முழு யாழ். நகரமும் பெரும் சோகமே உரு வெடுத்தாற்போல் காட்சியளித்த வேளையில் இந்த உணர்வின் உந்துதலினால் தமது ஆட்சேபனையை சனநாயக ரீதியில் வெளிகாட்ட முற்பட்ட பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் இளைஞர் மற்றும் பொது மக்கள் மீதும் சிறிலங்கா இராணுவம் தமது மிலேச்சத்தனமான ஆயுத முனையிலான தாக்குதல்களை மேற்கொண்டு யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நின்ற ஒரு அப்பாவி பொது மகனை துப்பாக்கி முனையினால் படுகொலை செய்ததும், பலரை காயப்படுத்தியதும் அதேவேளை தமிழீழ தேசிய மாணவ பேரவையின் யாழ். செயலகத்தையும் அதன் சொத்துக்களையும் சேதப்படுத்தியதும் ஒரு யுத்தத்திற்கான நேரடி அழைப்பாகவும், அமைதிச் சூழலைத் திட்டமிட்டு குழப்புகின்ற செயற்பாடாகவுமே நாம் கருதுகின்றோம்

இப்படியான சம்பவங்கள் எதிர் காலத்தில் தவிர்க்கப்படவேண்டுமானால் மக்கள் நடமாட்டமும் போக்குவரத்துக்களும் அதிகமாகவுள்ள நகரப் பகுதிகள் முற்று முழுதாக இராணுவ மயமற்ற பிரதேசமாக மாற வேண்டும் அல்லது மாற்ற வைக்கப்பட வேண்டும் .(27,28,36,41,33, சு, கா)

---

# அரசியல் துறையினரின் தலையீட்டால் கொடிகாமம் வழமைக்குத் திரும்பியது!

(தென்மராட்சி)

கொடிகாமம் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறையினரால் திட்டமிட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட கோஷ்டி மோதல்கள் தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறையினரின் தலையீட்டினால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டன.

கடந்த சில தினங்களாக கொடிகாமம் பிரதேசத்தில் இராணுவப் பின்னணியுடன் கோஷ்டி மோதல்கள், வாள்வெட்டுக்கள்,கடை உடைப்புக்கள் என்பன இடம் பெற்றுவந்தன. இதில் ஒருவர் கடும் வெட்டுக்காயங்களுக்கு இலக்கானார்.

இச்சம்வங்கள் தொடர்பாக நேற்றுக்காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபை மண்டபத்தில் தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறையினரின் தலைமையில் முக்கிய கூட்டமொன்று நடத் தப்பட்டது.

இந்தக் கூட்டத்தின் முடிவில் தொடர்ந்தும் பிரச்சினைகள் எழுவதை தடுப்பதாக சகல தரப்பினரும் உறுதியளித்தனர். அத்துடன் இப்பிரதேசத்தில் சமூக ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் வர்த்த கர்கள், பொதுமக்கள், சமூக நலன் விரும்பிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து கொடிகாமம் பிரதேசம் வழமைக்கு திரும்பியதுடன் வர்த்தக நிலையங் களும் திறக்கப்பட்டன. (28)

# எரிக்கப்பட்ட காவலரண்கள்; இரவோடு இரவாக புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பதாக நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ வாகன விபத்தையடுத்து எழுந்த வன்முறைகளின் போது தீயிடப்பட்ட இராணுவக் காவலரண்களை மீள நிறுவும் நடவடிக்கைகளில் அன்றிரவு முழுவதுமாக படைத்தரப்பு ஈடுபட்டிருந்தது.

மேலதிகமாக பெருமளவு படையினர் அங்கு குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கையில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிலையில் மற்றொரு தொகுதி படையினர் தீயிடப்பட்டிருந்த காவலரண்களை மீள நிறுவும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளைகுறித்த வன்முறைச் சம்பவத்தின் போது தீயிடப்பட்டிருந்த பலாலி வீதியின் பரமேஸ்வரச் சந்தியை அணிமித்துள்ள இராணுவக் காவலரண் அன்றிரவே முற்றாக மீண்டும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று இரண்டாம் தடவையாக மீண்டும் தீயிடப்பட்டிருந்த சர்ச்சைக்குரிய படையினரின் கலட்டிச் சந்தி அப்பக்கடைப் பகுதிக்கும் படைத்தரப்பு பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது. அங்கும் எரியூட்டப்பட்ட அப்பக் கடையினை மீள நிறுவும் நடவடிக்கையினை படையினர் இரவோடிரவாக மேற் கொண்டிருந்தனர். (27)

# யாழ்.தீவகக் கல்வி வலயத்தில்; 138 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

(தீவகம்)

யாழ்தீவகக்கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறை பெரிதும் நிலவிவருகிறது.

தீவகக் கல்வி வலயத்தில் தற்பொழுது 138 ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதனால் பாடசாலைகளில் உரிய முறையில் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறுவதில்லை எனக் குற்றம் சாட்டப்படுகிறது.

ஆசிரியர் பற்றாக் குறையால் இப்பகுதி மணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப் பட்டிருப் பதாக தெரிவிக்கப்படுகிறது. (33)

# திடீர் இராணுவ பிரசன்னத்தால் வடமராட்சியிலும் பதற்றம்

(வடமராட்சி)

வடமராட்சியின் பருத்தித்துறை மற்றும் நெல்லியடிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் கடும் பதற்றம் நிலவியது.

சிறிலங்கா இராணுவத்தினர் இப்பகுதிகளுக்குள் திடீரென பத்துப் பேருந்துகளில் வந்து மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

இதனால் சில மணி நேரம் அப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவிய போதும் களேபரம் எதுவும் ஏற்படவில்லை.

யாழ்.குடாநாட்டில் பாடசாலை மாணவி துளசிகா இராணுவ உழவு இயந்திரத்தால் மோதுண்டு பலியானதைத் தொடர்ந்து அங்கு இடம் பெற்ற களேபரங்களை அடுத்தே பருத்தித்துறை பகுதியிலும் ப்டையினர் மக்களை அச்சுறுத்தும் வகையில் இவ்வாறு பேருந்துகளில் வந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (கா)

## விபத்தில் கால்முறிந்தது

(நல்லூர்)

உந்துருளிகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவருடைய கால் முறிவடைந்துள்ளது.

இணுவில் வைத்தியசாலைக்கு அருகாமையில் கடந்த புதன் கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

அண்மையில் சுவிஸில் இருந்து வந்திருந்த ஏழாலை மேற்கைச் சேர்ந்த கந்தசாமி நாகேஸ்வரன் (வயது-39) என்பவரே கால் முறிந்து தற்போது யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (41)

# கிளி.நகரில் சட்டத்திற்கு முரணாக செயற்படும் வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை

## -நாளை முதல் அமுலாக்க பிரதேசசபை முடிவு

(அலுவலக செய்தியாளர்)

**வீதிப் போக்குவரத்துக்கு இடையூறாகவும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமலுமுள்ள கிளிநொச்சி நகர வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை அறிவித்துள்ளது.**

பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தம் விடுத்துள்ள அறிவித்தலில், நாளை ஏழாம் திகதி முதல் அறிவுறுத்தப் பட்ட நடைமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது எம்மால் தொடர்ந்து வழங்கப்பட்ட அறிவித்தல்களையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்தும் வர்த்தகர்கள் கீழ்க் குறிப்பிடப்படும் சட்ட விரோத செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

1)வியாபார நிலையங்களுக்கு முன்னால் விற்பனைப் பொருட்களை பெருமளவில் காட்சிக்கு வைத்து பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறு செய்தல், 2) மத்தியிலிருந்து 66 அடிக்குள் தங்காலிக அனுமதியுடன் வர்த்தகம் நடாத்தும் வர்த்தகர்கள் தகரங்கள், அஸ்பெஸ்டஸ் கூரைகள் மூலம் வியாபார நிலையத்திற்கு முன்னால் நீட்டியும் அதற்குள் வியாபாரப் பொருட்களை வைத்திருந்தும் போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்தல், 3)தங்கள் வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் சேரும் கழிவுகளையும் தங்கள் வர்த்தக நிலையங்களினுள் சேரும் கழிவுகளையும் தங்கள் வர்த்தக நிலையத்திற்கு முன்னால் அல்லது பக்கத்தில் குவித்தல், அதனை எரித்து போக்குவரத்திற்கும் சுகாதாரத்திற்கும் சுற்றாடலுக்கும் இடைஞ்சல் ஏற்படுத்தல், 4) பிரதேச சபையின் அறிவுறுத்தலுக் கமைய கழிவு சேகரிக்கும் கொள் கலன்களைக் கொள்வனவு செய்து வர்த்தக நிலையங்களுக்கு முன் வைத்திருக்காமை. அவற்றை பிரதேச சபை மூலம் கட்டணம் செலுத்தி அப்புறப்படுத்தாமை, 5) வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்பட்ட கால்வாய்களை மூடுதல், அறிவுறுத்தப்பட்டதற்கமைய நீர்க்குழாய்கள் பொருத்தாமை.


எனவே இத்தகைய சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் மீளவும் அறிவுறுத்தப்படுகின்றது.

எனவே மேற்கூறப்பட்ட சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவற்றை சரி செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். எனவே நாளை திங்கட்கிழமை காலையில் வர்த்தக நிலையங்கள் திறக்கும் போது குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரி செய்திருப்பதை உறுதிப் படுத்தி திறக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (சோ)

## சமுகம் தரவும்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வலயபாடசாலைகளில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியை நிறைவுசெய்யாத சகல பட்டதாரி ஆசிரியர்களையும், பட்டதாரி பயிற்சி ஆசிரியர்களையும் நாளை காலை 9.00 மணிக்கு தவறாது கல்விப்பணிமனைக்கு சமுகமளிக்கும் வண்ணம் கிளி. வலயக்கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசா வேண்டியுள்ளார். (சோ)



உலக உணவுத்திட்டத்தின் கீழ் பூநகரி பிரதேச செயலரின் நேரடிக் கண்காணிப்பில் கீழ் ஜெயபுரம் பண்டிவெட்டிக் கிராமத்தில் மாதிரிப் பண்ணைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் 35 விவசாயிகள் மேட்டு நிலப்பயிர்ச்செய்கையினை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி பண்ணையின் ஒரு பகுதியினைப் படத்தில் காணலாம். (படம்.சோதி)

# சமாதான காலத்திலும் நில ஆக்கிரமிப்பு அப்பட்டமான இனத்துவேச நடவடிக்கை!

## –திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்டனம்

(திருமலை)

தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த நில ஆக்கிரமிப்புத்தான் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பமாவதற்கு முக்கிய காரணியாக அமைந்தது என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

திருகோணமலை முற்றவெளியிலும் நில ஆக்கிரமிப்பை மேற்கொள்ளுவதற்கு ஜே.வி.பி. எடுத்த முயற்சி ஜே.வி.பி.யின் முட்டாள் தனத்தையே எடுத்துக் காட்டுகின்றது என்றும் எழிலன் மேலும் தெரிவித்தார்.

பொது விளையாட்டு மைதானம் அனைத்து மக்களின் பாவனைக்குரிய இடமாகும். அவ்வாறான இடத்தில் வீடுகளைக்கட்டி மக்களைக் குடியமர்த்துவது என்பது சமூகவியல் சிந்தனையற்ற செயல் என்பதை ஜே.வி.பி யினர் உணராதது அவர்களின் முட்டாள்தனத்தையே புலப்படுத்துகின்றது. என்றும் எழிலன் குறிப்பிட்டார்.

ஆக்கிரமிப்புக் குடியேற்றங்களை தமிழர் தாயகத்தில் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் திட்டமிட்டு சிங்கள அரசாங்கங்கள் மேற்கொண்டு வந்துள்ளன. தமிழரின் உரிமைப் போராட்டம் ஆரம்பமாவதற்கு முழுக் காரணமாக அமைந்த ஆக்கிரமிப்புக் குடியேற்றத்தை, சமாதான காலத்திலும் மேற்கொள்வதற்கு ஜே.வி.பி யினர் முயற்சித்தது அப்பட்டமான இனத்துவேச நடவடிக்கை என்றும் எழிலன் தெரிவித்தார்.

# சிறுவனிடம் சங்கிலி அபகரித்தவர் கைது!

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான்-சின்னச்சாளம்பன் பகுதியில் சிறுவனை ஏமாற்றி அபகரித்துச் செல்லப்பட்ட தங்கச் சங்கிலியும், பென்ரனும் புதுக்குடியிருப்பு காவல் பணிமனையினரால் அண்மையில் மீட்கப்பட்டது.

புதுக்குடியிருப்பில் வாணிப முயற்சியில் ஈடுபட்டுள்ள ஒருவருக்குச் சொந்தமான சின்னச்சாளம்பன் பகுதி வயலில் வேலைக்குச்சென்ற நபர் குறித்த சிறுவனை ஏமாற்றி அபகரித்த சங்கிலியையும், பென்ரனையும் தனித்தனியே விற்றுப் பணமாக்கியபின் குறிப்பிட்ட நபர் காவல்துறையினரிடம் சிக்கியுள்ளார். (19)

# முல்லையில் கழிவுகளை அகற்றத் தயக்கம்!

(முல்லை)

முல்லைத்தீவு நகரப் பகுதியில் சுனாமிக்கு பிற்பாடு ஒருசில வர்த்தக நிலையங்களும் சந்தை வியாபாரிகளும் தமது தொழிலை மேற்கொண்டு வருவதனால் கழிவுப் பொருட்கள் தேங்கிக் காணப்படுகின்றன. இதனால், துர்நாற்றம் வீசும் நிலை காணப்படுவதோடு சுகாதாரத்திற்கும் கேடாகவுள்ளது.

சுனாமிக்கு முன்பு ஒவ்வொரு நாளும் கழிவுகளை அகற்றி வந்த போதிலும் தற்போது கழிவுகளை அகற்றாது இருப்பதையிட்டு வர்த்தகர்கள், சந்தைவியாபாரிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். (20)

# துணுக்காய் பிரதேசத்தில் பெண்கள் கருத்தூட்டல் நிகழ்வு

(மல்லாவி)

அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு துணுக்காய் பிரதேச பெண்களுக்கான கருத்தூட்டல் நிகழ்வு நேற்றுக்காலை 10.30 மணிக்கு இடம்பெற்றது.

யோகபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் பிரதேச மாதர் சங்கத்தலைவி திருமதி. விஜயலட்சுமி தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இங்கு கருத்துரைகளை மல்லாவி மருத்துவமனை வைத்திய அதிகாரி திருமதி. ப. ஏகாம்பரமூர்த்தி,துணுக்காய் பிரதேச சபைத் செயலாளர் த.கோமளவள்ளி, முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர்பொறுப்பாளர் வே.வேழினி, போராளி தமிழ்க்கவி ஆகி யோர் நிகழ்த்தினர்.

இதேவேளை பாண்டியன் குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் நேற்றுக்காலை 10.00 மணிக்கு நடைபெற்ற கருத்தூட்டல் நிகழ்வுக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க செயலாளர் திருமதி. க.லட்சுமி தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில் சிறப்புரைகளை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன், முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் அ.தனிநாயகம், தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் மூர்த்தி ஆகியோர் வழங்கினர். (24)



பூநகரி மன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள மண்டைக் கல்லாறு பாலம் சேதமடைந்த நிலையில் உள்ளதனையும் மேற்படி பாலம் பல வருடகாலமாகப் புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளாத நிலையில் உள்ளதன் காரணமாக மேற்படி வீதியில் பயணிக்கும் வாகனங்கள் பெரும் இடையூறுகளுக்கு மத்தியிலேயே மேற்படி பாலத்தினூடாக பயணத்தினை மேற்கொண்டு வருகின்றன. சேதமடைந்துள்ள மேற்படி வீதியினை படத்தில் காணலாம். (படம். சோதி)

## திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி

திருக்கேதீஸ்வரஆலயத்தில் மகா சிவராத்திரி விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம் பெறும் காலை 5.00 மணி முதல் மறுநாள் மாலை வரை விசேட பூசைகளும், கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளதாக திருக்கேதீஸ்வர ஆலயதிருப்பணிச்சபை அறிவித்துள்ளது.

# மாணவர்களுக்கு உதவி வழங்கல்

(முல்லை)

கியுடெக் நிறுவனத்தால் கடந்த வாரம் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும், சீருடைகளும், உள்ளாடைகளும் முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

அத்துடன முல்லை மகாவித்தியாலய தற்காலிக கொட்டகைக்கான கிடுகுகள, A/L மாணவர்களுக்கான பாடக் குறிப்புக் கொப்பிகள் என்பன வழங்கப்பட்டன. மேலும் மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகளும், ஏனைய கல்வி உபகரணங்களும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக கியூடெக் நிறுவனப் பிரதிநிதி அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் தெரிவித்தார். (20)

# ஒன்பது பேர் தாயகம் வருகை

(மன்னார்)

இந்தியா கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி அகதிமுகாம் , கோவை அகதிமுகாம், ஆகிய இடங்களில் வசித்த ஒன்பது இலங்கைவாழ் தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் தலை மன்னார் ஊடாக தாயகம் திரும்பியுள்ளார்கள். இவர்களில் ஐந்து ஆண்களும், நான்கு பெண்களும் அடங்குவர். இராமேஸ்வரத்தில்இருந்து வத்தை மூலம் பயணத்தை ஆரம்பித்த இவர்கள் தீடை என அழைக்கப்படும் மணல் மேட்டில் இறக்கப்பட்டனர். பின் அவர்கள் சிறிலங்காக் கடற்படையினரின் படகில் ஏற்றப்பட்டு தலை மன்னாருக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களை நேற்றுத் தலைமன்னார் பொலிசார் மன்னார் நீதி மன்றில் முன்னிலைப்படுத்தினர். மன்னார் நீதிபதி அப்துல்லா, அவர்களின் சொந்த இடமான கிளிநொச்சி பாரதிபுரம் ,மாங்குளம்,மன்னார் செபஸ்ரியார் கோவிலடி ஆகிய இடங்களுக்கு மன்னார் கிராம உத்தியோகத்தர் மூலம் அனுப்பிவைத்தார். (18)

# மாவோயிஸ்டுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த

# பிரி.,இந்தியாவுடன் அமெ. கூட்டாக செயற்படமுடிவு

(வோஷிங்டன்)

**நேபாளத்தில் மீண்டும் ஜனநாயகம் தளைத்தோங்கச் செய்வது மற்றும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை இந்தியா மற்றும் பிரிட்டனுடன் கூட்டாகச் சேர்ந்து மேற்கொள்வோம் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.**

இது குறித்து தெற்காசிய விவகாரங்கள் துறையின் முதன்மைத் துணைச் செயலர் டெவிட்கேம்ப் வோஷிங்டனில் புதன்கிழமை கூறியதாவது; நேபாளத்தின் மன்னர் ஞானேந் திராவிடமிருந்து மாவோயிஸடுகள் ஆட்சியைக கைப்பற்றும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. ஆட்சி நிர்வாகம் மாவோயிஸ்ட்டுககள், கையில் சென்றால் நேபாளம் மட்டுமல்ல அதன் விளைவுகளை தெற்காசிய நாடுகளும் சந்திக்கவேண்டியிருக்கும்.

எனவே மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் பயங்கரவாதச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க நட்பு நாடுகளான இந்தியா மற்றும் பிரிட்டனுடன் சேர்ந்து அமெரிக்கா பணியாற்றும். இது குறித்து நேபாளத்தி லுள்ள இந்தியா, பிரிட்டன் தூதர்கள் மற்றும் அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதர் ஆகியோருடன் ஒருங்கிணைந்து பணியாற்று வோம். நேபாளத்தில் தற்போது நிலவும் தேக்கநிலைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா வுக்குத்தான் பெரும்பங்குள்ளது. நேபாளத் தைப் பொறுத்தவரை அந்தப் பிராந்தியத்தில் உள்ள பெரிய சக்தியாகவும், அண்டை நாடாகவும் இந்தியா விளங்குகிறது. நேபாளத்தின் நிலைமை மோசமானால் அதனால் அண்டையிலுள்ள இந்தியாவுக்குத் தான் பாதகம் அதிகம். வெகுதூரத்திலுள்ள அமெரிக்காவுக்கு அல்ல. எனவே மாவோஸ் டுகளின் தீவிரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து நேபாளத்தில் ஜனநாயகம் மீண்டும் தளைத்தோங்கச் செய்யும் பணியை இந் தியா, மற்றும் பிரிட்டனுடன் கூட்டு முயற்சியில் அமெரிக்கா ஈடுபடும். மாவோயிஸ்டுக்களை ஒடுக்க நேபாள அரசுதான் உரிய நடவடிக் கைகளை எடுக்கவேண்டும். இந்தியாவின் உதவியை மன்னர் ஞானேந்திரா கோருவாரா என்பது குறித்து கருத்துக் கூறமுடியாது. மாவோ யிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் சீனாவிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றார் கேம்ப்


## மீண்டும் நிலநடுக்கம்

இந்தோனேஷியாவில் கடந்த ஆண்டு டிசம்பா மாத நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அவ்வப் போது நிலநடுக்கம் ஏற்பட்டு அந்த நாட்டு மக்களைப் பயமுறுத்தி வருகிறது. இந்த நிலையில் நேற்று அதிகாலையில் ஒருமணி அளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அங்குள்ள தவுலத்தீவுப் பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் 6.1 ரிச்டர் அளவாகப் பதிவா னது இதில் சில கட்டடங்கள் சேதமடைந்துள ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஈராக் பிரதமர் இயத்அலாவி அண்மைய தேர்தலில் மூன்றாம் நிலையில் உள்ளார். அவரைப் பதவி விலகும் வண்ணம் ஈராக்கிய பையன் ஒருவன் வெள்ளிக் கிழமைத் தொழுகையில் சத்தமிடுகின்றான்.

அமெரிக்கப் படையினர் பாக்தாத் விமான நிலைய வீதிச் சோதனைச் சாவடியில் வைத்து ஒரு சாரதியிடம் வினாவுகின்றனர்.



## இங்கிலாந்தில் 63 இலட்சம் பேரை பலி கொண்டபுகைப்பழக்கம்

(லண்டன்)

இங்கிலாந்தில் கடந்த 50 ஆண்டுகளில் புகைப் பழக்கத்திற்கு அடிமை யானதால் நுரையீரல் புற்றுநோய் உட்படப் பல்வேறு நோய்கள் ஏற்பட்டு 63 இலட்சம் பேர் பலியாகி இருக்கிறார்கள். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பேராசிரியர் ரிச்சர்டு பீட்டோ இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். பலியானவர்களில் 42 சதவீதத்தினர் 35 முதல் 70 வயதுக்கு உட்பட்ட ஆண்கள், பெண்களாகும். என்றும் பேராசிரியர் ரிச்சர்ட் பீட்டோ கூறியிருக்கிறார்.

## எண்ணெய் விநியோகத்தை நிறுத்துவோம் அமெரிக்காவிற்கு வெனிசுவெலா எச்சரிக்கை

வெனிசுவெலாஆளும்கட்சிக்கு எதிரான போக்கை அமெரிக்கா தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் அதற்கான எண்ணெய் விநியோகத்தை நிறுத்துவோமென வெனிசுவெலா அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவுக்கு எண்ணெய் விநியோகம் செய்யும் நாடுகளில் ஒன்று வெனிசுவெலா. கடந்த சில நாட்களாக அமெரிக்கா- வெனிசுவெலா நாடுகளுக்கு இடையே உறவு மோசமாகி வருகிறது. வெனிசுவெலா அதிபர் ஹுகோ சாவசைக் கொல்லச் சதி நடப்பதாகவும், அமெரிக்கா இதன் பின்னணியில் இருப்பதாகவும் சாவஸ் புகார் கூறியிருக்கிறார்.

அமெரிக்கா தொடர்ந்து இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அமெரிக்காவுக்கு எண்ணெய் விநியோகத்தை நிறுத்திவிடுவோம் என்றும் சாவஸ் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.



சிரியப் படையினர் சிலர் சீருடையுடனும், சிலர் வேலைசெய்யும் ஆடையுடனும் கிழக்கு பெய்ரூட்டில் கம்மானா கிராமத்திற்கு அண்மையாக புதிய இராணுவமுகாமொன்றை அமைக்கின்றனர்.



பனிக்கட்டியை அகற்றும் இயந்திரம் நெதர்லாந்தின் டியுமோலில் பனிக்கட்டி களை அகற்றுகிறது.

## இத்தாலிய உளவுப் படை அதிகாரி, நிருபர் மீது பாக்தாத்தில் அமெ.படையினர் துப்பாக்கிச் சூடு

### - உளவுப்படை அதிகாரி பலி; புஷ் மன்னிப்புக் கோரினார்

(பாக்தாத்)

பாக்தாத்தில் அமெரிக்க இராணுவ சோதனைச் சாவடியில் காரை நிறுத்தாமல் சென்ற இத்தா லிய பத்திரிகையாளரும்,இத்தாலிய உளவுப்படை அதிகாரியும் சுடப்பட் டுள்ளனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் உளவுப் படை அதிகாரி பலியாகி யுள்ளார். நிருபர் காயமடைந்துள் ளார்.

ஈராக்கில் செய்தி சேகரிக்கச் சென்ற இத்தாலி நிருபர் குலியானா கிரீனாவை தீவிரவாதிகள் கடந்த மாதம் கடத்திச் சென்றுவிட்டனர். ஒரு மாதத்துக்கும் மேலாக பணயக்கைதியாக வைத்திருந்த அந்தப் பெண் நிருபரைத் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் விடுவித்தனர்.

அவரும் இத்தாலியைச் சேர்ந்த உளவுப்படை அதிகாரி ஒருவரும் பாக்தாத் நகரில் காரில் விமான நிலையம் நோக்கிச் சென்றபோது, அமெரிக்க இராணுவத்தினர் சோத னைச் சாவடியில் காரை நிறுத் துமாறு பணித்தனர். தீவிரவாதிகள் எனப் பயந்து அந்தக் காரை நிறுத்தாமல் காரை சாரதி வேகமாக ஓட்டிச் சென்றார். இதனால் அமெரிக்க இராணுவத்தினர் அந்தக் காரை நோக்கிச் சுட்டனர்.

இதில் இத்தாலிப் பெண் நிருபர் குலியானா கிரீனா காயமடைந்தார். அதில் இருந்த உளவுப் படை அதி காரி பலியானார்.

அமெரிக்க இராணுவத்தினர் அதன் ஆதரவு நாடான இத்தாலி யின் பெண் நிருபரைச் சுட்ட சம்பவம் இத்தாலிக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இத்தாலி பிரதமர் சில்வியா பெர்லுஸ்கோனிக்கும் இது அதிருப் தியை ஏற்படுத்தியது. அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தொலைபேசி யில் இத்தாலி பிரதமரிடம் நடந்த சம்பவத்துக்கு மன்னிப்புக் கோரினார்.

## உலகின் முதல் தொழில் நகரம் 'மாரி' பிரெஞ்சு அகழ்வாராய்ச்சியினர் தெரிவிப்பு

(பரிஸ்)

பண்டைக்காலத்து மொசபடோமியவில் இருந்த 'மாரி' நகரம் தான் உலகின் முதல் தொழில் நகரம் என்று பிரெஞ்சு அகழ்வாராய்ச்சித் துறையினர் கண்டுபிடித்துள்ளனர். மாரி' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள புத்தகத்தில் இன்றைய சிரியாவிலுள்ள இந்நகரம் தான் உலகின் முதல் நவீன நகரம் என்று ஜீன்க்ளாட் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

25 ஆண்டு கால கடும் ஆய்விற்குப் பின்னரே இந்த உண்மையை பிரெஞ்சு அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். பாலைவனம் சூழ்ந்த இந்தப் பகுதியில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்நகரம் எப்படி உருவாகியிருக்க முடியும் என்ற மர்மத்திற்கு இப்போது விடை கிடைத்துள்ளது. 1935ஆம் ஆண்டு இப்பகுதியிலிருந்து இஸ்தார் போபிலும் மன்னர் லாக்மிமாரியின் சிலையும், மற்றும் அழகிய சிலைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் மூலம் மாரி பகுதியில் அந்தக் காலத்திலேயே உலோகப் பயன்பாடு இருந்திருக்கிறது. ஆயுத தளபாடங்கள் புழக்கத்தில் இருந்துள்ளன என்ற உண்மைகளை அகழ்வாராய்ச்சியினர் தெரிவித்துள்ளனர்.

## இலஞ்சம் வாங்குவதைப் பெருமையாக பேசிய மந்திரி பதவி இழந்தார்

கட்டுமானக் கம்பெனிகளிடம் 10 சதவீதம் இலஞ்சம் தரும்படி கேட்டு வாங்கக் கூடிய அளவுக்கு நான் இருக்கிறேன் என்று ஈ குவடோர் மந்திரி பொதுக் கூட்டத்தில் பேசினார். இது தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது இதனால் அவர் பதவி இழக்க வேண் டிய நிலையேற்பட்டது.

ஈகுவடோர் நாட்டில் பொதுப் பணித்துறை மந்திரி யாக இருந்தவர் ஜோர்ஜ் பினோஸ் .இவர் பொதுக் கூட்டத்தில் இலஞ்சம் வாங்குவதை பெருமையாக ஒப்புக் கொண்டார்."கட்டுமானக் கம்பெனிகளிடம் 10 சதவீதம் இலஞ்சம் தரும்படி கேட்டு வாங்கக்கூடிய நிலையில் நான இருக்கிறேன் அதனால் தான் கைவிடப்பட்ட நகரங்களில் கூட அவர்கள் சாலைகள் போடமுடிகிறது. இவ்வாறு மந்திரி பினோஸ் கூறினார். இது ஊடகங்களில் வெளியானது. இதனால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. தன் பேச்சுக்கு எதிர்ப்புக் கிளம்பியதைத் தொடர்ந்து எனக்காக நான் இலஞ்சம் கேட்கவில்லை. ஏழை மக்களுக்குப் பலன் கிடைப்பதற்காகத்தான் கேட்டேன் என்று விளக்கம் அளித்தார். இதைத் தொடர்ந்து அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பினோஸ் தன் பதவியை ராஜினாமாச் செய்து இருக்கிறார். புதிய மந்திரி யார் என்பதை சனாதிபதி லூசியோ கியூட்டி யாஸ் விரைவில் அறிவிப்பார்" என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

# வடமாநில தேர்தல் முடிவுகள்

# எவருக்கும் பெரும்பான்மை இல்லாத நிலை!


ஹரியானாவின் புதிய முதலமைச்சர் பூவிந்தர்சிங்ஹீடா

இந்திய வடமாநில தேர்தல் முடிவுகள், மக்களவை, மாநிலங்களவைகளை ஒரு கலக்குக்கலக்கிக் கொண்டிருக்கின்றது என்றால் மிகையில்லை.அந்தவகையில் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் கூச்சல் குழப்பம், வெளிநடப்பு என்பவற்றால் அல்லோலப்படுத்திக் கொண்டிருக்கின்றது. அதாவது இரு அவைகளும் எதிர்க்கட்சியினரால் முடக்கப்பட ஆரம்பித்துள்ளது என்றால் மிகையில்லை.

அதேவேளை இந்த முடிவுகள் காரணமாகத் தேர்தல் நடைபெற்ற மாநிலங்களில் ஜார்க்கண்ட், பீகார் மாநிலங்களில் பதற்ற நிலையே உருவாகி இருப்பதைக் காண முடிகின்றது.

மாநிலங்களை தம்வசப்படுத்தி விட்டதாக காங்கிரஸ் கூட்டணி பட்டாசு கொளுத்தும் அதேநேரம் மாநிலங்களைக் கோட்டை விட்ட இயலாமை மனப்பான்மை போன்று பாரதிய ஜனதாக் கூட்டணி மாநிலங்களில் கதவடைப்புப் போராட்டம் நடத்தப்போவதாக எச்சரிக்கத் தொடங்கியுள்ளன.

ஏற்கனவே மத்தியில் ஆட்சியைப் பறிகொடுத்த பாரதிய ஜனதாக்கூட்டணி மாநிலங்களைத்தக்க வைப்பதன் மூலம் மத்தியரசிற்கு நிகராக கோலோச்ச முடியும் என்றே நம்பியது.

அதனால் தான் மாநிலங்களில் தொடர்ச்சியாகப் பிரச்சாரங்களை முடுக்கிவிட்டு இரவும்பகலுமாகத் தமது வேகத்தைக் காட்டியது.

ஆனால் தேர்தல் முடிவுகள் பாரதிய ஜனதாக் கூட்டணிக்குச் சாதகமாக அமைந்துள்ளதா.... என்றால் இல்லை என்றே கூறும் அளவிற்கே தேர்தல் முடிவுகள் காணப்படுகின்றன.

அதேநேரம் ஹரியானா, ஜார்க்கண்ட் மாநிலங்கள் காங்கிரஸ் வசமாகியுள்ளன. பீகாரில் சனாதிபதி ஆட்சியே ஏற்படக்கூடும் எனும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

அதாவது பீகார் மாநிலத்தில் எல்லோரும் நினைத்தமாதிரி முடிவுகள் எதுவும் அமையவில்லை. இம்முறை மக்கள் தமது வாக்குகளைச் சிதறலாகப் பிரித்து வழங்கியுள்ள நிலையே அங்கு உள்ளது.

இதனால் அங்கு எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத காரணத்தினால் சனாதிபதி ஆட்சி வெகுவிரைவில் அமுல்படுத்தும் நிலையே வெளித்தெரிய ஆரம்பித்திருக்கின்றது.

1990 முதல் 14 ஆண்டுகள் லல்லுப்பிரசாத்தின் ராட்சிய ஜனதாத்தளமே ஆட்சியைத் தக்க வைத்திருந்த நிலை இன்று மாறி விட்டது. யாதவகுல மக்களின் கதாநாயகனாக வீற்றிருந்த லல்லுப்பிரசாத்தின் நிலை இன்று கேள்விக் குறியாகிவிட்டது.


இதனால் தான அக்கட்சி 75 இடங்களை மட்டுமே தக்கவைக்க முடிந்திருக்கின்றது. ஏற்கனவே பஸ்வானுடன் (லோக் ஜனசக்தி) மல்லுக் கட்டி நின்ற லல்லுவுக்கு இன்று ஆட்சியமைக்க வேண்டுமெனில் பஸ்வானின் (29 இடங்கள்) ஆதரவு தேவை.

இதேவேளை பாரதிய ஜனதா, ஐக்கிய ஜனதாத்தளம் என்பனவும் ஆட்சியமைக்க வேண்டுமானால் கூட பஸ்வானின் ஆதரவு தேவை.

இதனால் தான் தற்போது நடந்து முடிந்த மாநிலத்தேர்தல் பஸ்வானை மிகப்பெரிய இடத்திற்குத் தூக்கி வைத்திருக்கின்றது என்றே கூற வைக்கின்றது.

இல்லையேல் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி பஸ்வானை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய தேவை ஏன். ஏற்பட்டிருக்கவேண்டும்......? அதுமட்டுமன்றி லல்லுவுடன் சேர்ந்து ஆட்சியமைக்க ஒருபோதும் உடன்படப்போவதில்லை என்பதில் பஸ்வான் உறுதிகாட்டுவது காங்கிரஸ் கட்சிக்குப் பெரும் தலைவலியைத்தான் ஏற்படுத்தியுள்ளதைக் காட்டுகின்றது.

நேற்றைய நிலைமைகளின் படி பீகாரில் சனாதிபதி ஆட்சியே ஏற்படும் எனும் நிலையே தலைதூக்கியுள்ளது.


பீகாரில் பதவியை இழந்த ராப்பரிதேவியும் லல்லுவும்

ஜார்க்கண்ட் மாநிலத்தில் முக்தி மோட்சா கட்சித் தலைவரான சிபு சோரன் முதலமைச்சர் பதவியை ஏற்றிருக்கின்றார். சிபுசோரன் ஏற்கனவே மத்தியரசில் காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகிப்பவர் என்பதனால் ஜார்க்கண்ட் மாநிலம் காங்கிரஸ் வசமாகியுள்ளது என்றும் கூற முடியும்.

ஏற்கனவே ஜார்க்கண்ட் மாநிலத்தில் பாரதிய ஜனதாக்கூட்டணியே ஆட்சியிலிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால்தான் கடந்த மக்களவைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் சிபுசோரன் சேர்ந்தமை மட்டுமன்றி மத்தியமைச்சர் பதவியும் ஏற்றதைப் பொறுத்துக் கொள்ள முடியாது என்பது போன்று அப்போது மாநில ஆட்சியிலிருந்த பாரதிய ஜனதாக் கூட்டணி சிபுசோரனை ஓடஓட விரட்டிய காலமுமுண்டு.

ஜார்க்கண்ட் நீதிமன்றத்தில் ஏற்கனவே சிபுசோரன் மீது 1975 ஆம ஆண்டுமுதல் நிலுவையிலிருந்த வழக்கைத்தோண்டித் துருவியது. அதன் மூலம் சிபுசோரனுக்கு நீதிமன்றம பிடியாணை பிறப்பித்ததால் சிபு சோரன் தலைமறைவாக இருந்தகாலம் கடத்திய நாட்களுமுண்டு.

அதுமட்டுமன்றி சிபுசோரன் தனது மத்தியமைச்சர் பதவியைத் துறந்து நீதி மன்றத்தில் சரணடைந்தபோது சிபுசோரன் விவகாரம் தலை முழுகப்பட்டுவிட்டது என்றே பாரதிய ஜனதாக்கட்சி நினைத்திருக்க முடியும்.

ஆனால் சுவரில் எறிந்த பந்தாய் சிபுசோரன் மீண்டும் வெளியே வந்தது மட்டுமன்றி மத்தியமைச்சர் பதவியையும் மீண்டும் பெற்றுவிட்டார்.

அத்துடன் ஜார்க்கண்ட் மாநிலத்தில் இனி பாரதிய ஜனதாக் கூட்டணி ஆட்சியமைக்க விடப்போவதில்லை. மாநிலத் தேர்தலுடன் அக்கூட்டணி தூக்கிவீசப்படும். தனது கட்சியே ஆட்சிப்பீடமேறும் என்றும் சபதமிட்டார்.

அதேபோன்று சிபுசோரன் இன்று முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார். ஆனால் அங்கு பதற்றம் நிலவுவதாக அச்சம் வெளியிடப்பட்டிருக்கின்றது. ஏனெனில் பெரும்பான்மை இல்லாத முக்தி மோட்சாக் கட்சியை மாநில ஆளுநர் எஸ்.எஸ்.ராஜு ஆட்சியமைக்க அழைத்தமை பிழையானதொரு நடவடிக்கை என்று பாரதிய ஜனதா கோஷமிடுகின்றது.

அதுமட்டுமன்றி தமது கூட்டணிக்கே பெரும்பான்மை இருக்கின்றது என்றும் மாநில ஆளுநரின் நடவடிக்கை கண்டிக்கப்பட்டு ஆட்சி கைமாற வேண்டும் என்பது போலவேதான் அக்கட்சி டில்லிவரை சென்றுள்ளது.

இதனால் ஏற்கனவே அங்கு மாநிலம் தழுவிய கதவடைப்புப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக பாரதிய ஜனதாக் கூட்டணி எச்சரித்திருப்பது மாநிலத்தில் பதற்றத்தைத் தோற்றுவிக்கத் தவறவில்லை.


அத்வானி

உள்நாட்டு அவசரகால நிலைமைகள் ஏற்படும் எனும் பீதியும் அங்கு இல்லாமலில்லை. இதனால் புதிய முதலமைச்சர் சிபுசோரனும்,(முக்திமோட்சா) முன்னாள் முதலமைச்சர் அர்ஜன்முண்டாவும் நம்பிக்கை வாக்கெடுப்பில் ஈடுபடவேண்டுமென்று மாநில ஆளுநர் அழைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹரியானா மாநிலமும் காங்கிரஸ் வசமாகியுள்ளது இங்கு காங்கிரஸ் 2/3 பெரும்பான்மை பெற்றுள்ளதால் காங்கிரஸ் ஆட்சி அமைத்துள்ளது.


மொத்தத் தொகுதிகள் 90இல் காங்கிரஸ் 67 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளது. இதுவரை காலமும் இங்கு இந்திய தேசிய லோக்தளம் கட்சியே ஆட்சியிலிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இம்முறை வெறும் ஒன்பது இடங்களை மட்டுமே அக்கட்சி பெற்றுள்ளதால் ஆட்சியை இழக்க நேரிட்டுள்ளது. ஹரியானா மாநிலத்தை தம்வசப்படுத்திவிடப் போவதாக பிரச்சாரத்தில் தூள்கிழப்பிய பாரதிய ஜனதா வெறும் இரண்டு இடங்களை மட்டுமே பெற்றிருக்கின்றமையும் கவனிக்கத் தக்கதொன்று.

வடமாநில்த் தேர்தல் முடிவுகள் எவற்றைக் காட்டுகின்றன.......

மத்தியில் காங்கிரஸின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி பீடமேறியுள்ள நிலைமை மாநிலங்களிலும் காங்கிரஸின் செல்வாக்கை அதிகரிக்கச் செய்திருக்கின்றன.

அதேபோல் மத்தியிலிருந்து இறங்கிய தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சரிவும் மாநிலங்களில் செல்வாக்குச் செலுத்தவும் தவறவில்லை.




இந்தவகையில் ஹரியானா மாநிலத்தில் இதுவரைகாலமும் இல்லாத வகையில் காங்கிரஸ் ஆட்சிப்பீடமேற தேர்தல் முடிவுகள் வழிசமைத்துக் கொடுத்திருக்கின்றன.

அதேபோல் பீகாரிலும் காங்கிரஸ் கூட்டணி ஆட்சிப்பீடமேற முடிந்திருக்கும் லல்லுப் பிரசாத்யாதேவ் பஸ்வானுடன முரண்பட்டுக்கொண்டிருக்காது இருந்திருந்தால் மாநிலத்தில் தன்னைச் சரிய விடாது. வழமைபோன்றே 115 இடங்களைக் கைப்பற்ற முடியும் எனும் கனவே லல்லுப் பிரசாரத்தை அதலபாதாளத் தில் தள்ளி விட்டுள்ளது எனலாம்.

இதேநேரம் பஸ்வானை பாரதிய ஜனதா கூட்டணி தம்வசப்படுத்தத் தூதனுப்பிக் கொண்டிருக்கின்றது. பஸ்வான் எப்போது? எங்கு? கூட்டணிக்குத் தாவுவார்..... என்பது அவருக்கு மட்டுமே தெரிந்த ஒன்று.

ஏனெனில் காங்கிரஸ் பஸ்வான் எதிர்பார்க்கும் சலுகைகளை வழங்காத பட்சத்தில் பஸ்வான் பாரதிய ஜனதாவுடன் கூட்டணிக்குத் தாவினாலும் தாவலாம்.....?

இந்தநிலை மத்தியில் கூட்டணி வைத்திருக்கும் பஸ்வான் அதனை முறித்துக் கொள்ளும் அபாயமும் காங்கிரஸிற்கு இல்லாமலில்லை.

ஆனால் மத்தியில் கூட்டணி வேறு, மாநிலத்தில் கூட்டணி வேறு என்று பஸ்வான் மேலோட்டமாகக் கூறினாலும், அரசியல் சதுரங்கத்தில் யார் எப்போது காய் நகர்த்துவார்கள் என்பது அவரவர் பெறும் சலுகைகளைப் பொறுத்ததே என்றால் மிகையில்லை.

எனவே லல்லுப்பிரசாத்யாதேவ் பீகாரில் ஆட்சிப்பீடமேற முடியாமைக்கு நுதலும் தன் வாயால்கெடும் எனும் நிலையே காரணமாகி விட்டதாக ஒரு சாராரின் கணிப்பு.

அ.கலைவாணி

இதனால் தான் பீகாரில் லல்லுப் பிரசாத் பரிதாபமாக ஆட்சியைத்தக்கவைக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இதேபோன்று ஜார்க்கண்ட் மாநிலத்தில் பெரும்பாகம் முக்தி மோட்சாவே பெரும்பான்மை பெறலாம் என்றே கணிப்பு நிலவுகிறது.


எனவே வட மாநிலத் தேர்தல் முடிவுகள் மக்கள் மனதில் எந்தக்கட்சி மீதும் நம்பிக்கையின்மையினையே ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மையாகும் என்றால் தப்பில்லை.

**பகுதி-34**

# உயிர் இருக்கிறதா இல்லையா என்பதை பிரித்து அறிவதே பெரும் சிரமமாய் இருந்தது

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

**இப்படிப் பெரும்பாதிப்பு வந்திருக்கும் என்று நாங்கள் நினைக்கவேயில்லை. கடல் சும்மா கொஞ்சத் தூரத்துக்கு வந்து திரும்பிப்போயிருக்கும். ஆரும் நாலைஞ்சு சின்னப்பிள்ளையள் தண்ணிக்குள்ள மூழ்கியிருப்பினம் எண்டு நினைச்சு கொஞ்ச மருத்துவப் பொருட்களைத்தான் கொண்டு வந்தனாங்கள். அதால எங்களுக்குப் பெரிய தோல்வியாப்போச்சுது. வந்தகேசுகள் எல்லாம் மோசமான நிலையில வந்தது. இருந்தாலும் சமாளிச்சுக் கனபேரைக் காப்பாற்றிப்போட்டம் என்று சுனாமியில் சிக்கி உயிருக்காகப்போராடிக்கொண்டிருந்தவர்களுக்கான மருத்துவப் பணியாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவின் போராளி மருத்துவர் கதிரவன் தனது உயிர்காப்பு அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். அவர்பகிர்ந்தவை இங்கே வருகிறது.**



அ.லோகீசன்

எங்களது மருத்துவ முகாமில் அன்று காலை ஒரு சத்திர சிகிச்சைக்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தோம். அந்த நேரம் ஒருவர் வந்து "முல்லைத்தீவில் கடல் கொந்தளிச்சு கொஞ்சச் சனத்தை அடிச்சுக் கொண்டு போட்டுதாம்.அதோட கொஞ்சப்பேர் சரியாக் காயப்பட்டும் இருக்கினமாம்" என்று கதை அடிபடுவதாகச் சொன்னார்.

இந்தத் தகவலை எங்களால் நம்பமுடியவில்லை. நாங்கள் எங்களது வேலையில் தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டிருந்தோம். பிறகும் ஒரு பத்து நிமிசம்கழிய ஒரு ஐயா வந்து "தம்பி முல்லைத்தீவில கடல்பெருகினதால முல்லைத்தீவே அழிஞ்சுபோச்சுதாம் தப்பின சனம் றோட்டால நடந்து வந்து கொண்டிருக்குதுகள்" என்று தளம்பிய வாறு சொல்லிக்கொண்டிருந்தார். அதன்பிறகுதான் முல்லைத்தீவில் ஏதோ நடந்துவிட்டது என்பதை நாங்கள் உணர்ந்தோம். இதற்கிடையில் எங்களது மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் றேகா அண்ணா, மனோஜ் அண்ணாக்கள் வந்து இப்படி ஒரு சம்பவம் நடந்திட்டுது எண்டு தகவல் வந்திருக்குது என்னமாதிரி எண்டு தெரியேல்ல. எதுக்கும் நாங்கள் நேரில போனால்தான் தெரியும். நாங்கள் போகப் போறம் கதிரவன் நீங்களும் சின்ன மருத்துவச் 'செற்றப்'போட வாங்கோ. நிலைமை எப்படி எண்டு பார்ப்பம் எண்டு கூறினார்.

இதுவரையும் கிடைத்த தகவல்களை வைத்து கடல் உள்ளுக்கு வந்தால் தண்ணீரில் மூழ்கிற பிரச்சினைதானே வரும். அதால மூச்சுத்திணறல், கடல் தண்ணியைக் குடிக்கேக்குள்ள சுவாசப்பைக்குள்ள போகேக்க மூச்சடைப்பு, சுவாசப்பை செயலிழப்பு இப்படியான பிரச்சினைகள் தானே முதலில வரப்போகுது.

நாலைந்து குழந்தைகள் தண்ணியில மூழ்கியிருப்பினம். பெரியாக்கள் எல்லாரும் நடந்து வந்திருப்பினம். கடல் என்ன இடுப்பளவுக்கு அல்லது நெஞ்சளவுக்கு வந்திருக்கும் என்றது தான் என்ர கற்பனையாக இருந்தது.

அதுக்கு ஏற்றமா திரி சின்னப் பிள்ளைகளுக்கு ரீப்பை உள்ளுக்கு விட்டு செயற்கைச் சுவாசம் கொடுக்கக் கூடிய மாதிரியான ஒழுங்கோடையும் வயது வந்தவர்களுக்கு செயற்கைச் சுவாசம் கொடுக்கக் கூடிய மாதிரியும், மூச்சுத் திணறலால் இரத்தத்தில ஒட்சிசன் குறைவடைந்து போயிருக்கும். அதால ஒட்சிசன் குடுக்கிறதுக்கு ஏற்றமாதிரி ஒட்சிசன் சிலிண்டர்கள் போன்ற உயிர்காக்கும் மருத்துவப் பொருட்கள் சில வற்றை ஏற்றிக்கொண்டு முல்லைத்தீவை நோக்கிப் புறப்பட்டோம்.

எங்கள் வாகனம்வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. றோட்டால சனங்கள் எல்லாம் நீளமாய் நடந்து வந்துகொண்டிருந்தினம். அப்படி வந்துகொண்டிருந்த சனத்தின்ர தொகையையும், அவையின்ர முகபாவனையையும் பார்க்க ஏதோ பெரிய சம்பவம் தான் நடந்திருக்க வேணும் எண்டுற உணர்வு எனக்குள் வந்துவிட்டது.

சம்பவம் நடந்த முக்கால் மணி நேரத்துக்குள்ளாக நாங்கள் வட்டுவாகல் பாலத்தடிக்குப் போய்விட்டோம். பாலத்தைத்தாண்ட முடியாத நிலை. பாலம் உடைப்பெடுத்திருந்தது. அந்த உடைப்பைமூடி பாலத்தைச் செப்பனிடுகின்ற பணியில் போராளிகள் கடுமையாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஒருவாறு பாலம் சீர்செய்யப்பட்டு விட்டது. அந்தப் பகுதியில் இருந்து ஒரு உழவு இயந்திரம் வந்துகொண்டிருந்தது. அந்த உழவு இயந்திரத்தைக் கண்டதும் நாங்கள் மருத்துவ வேலைகளைச் செய்வதற்காக எங்களைத் தயார்படுத்திக்கொண்டிருந்தோம்.

உழவு இயந்திரம் எங்களருகில் வந்து நின்றது. என்ன இரண்டு மூண்டு பேர்தானே வருவார்கள் என்று கற்பனை பண்ணிக் கொண்டு உழவு இயந்திரத்துக்கு அருகில் போனேன்.என் ஊகம் எல்லாம் சிதறிப் போய்விட்டது. உழவு இயந்திரப் பெட்டி முழுவதும் அலங்கோலமான நிலையிலும் சேறும் சுரியுமாக



உடல்கள் இருந்தன. அப்படி இருந்த உடல்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தேன். அரைவாசிக்கும் மேலானவர்கள் உயிரிழந்து போய் இருந்தார்கள்.

உயிரிழந்தவர்களை விட்டுவிட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தவர்களை இனங்கண்டு சிகிச்சையை வழங்கினோம். அவ்வாறு இருந்தவர்களிலும் மோசமான நிலையில் இருந்தவர்களை தனியாகப் பிரித்தெடுத்து எங்களது வாகனத்தில் ஏற்றி அவர்களுக்கான சிகிச்சைகளை வழங்கினோம்.

சிலர் மிக மோசமான நிலையில் மூச்சே விட முடியாதபடி எந்நேரமும் சுவாசம் தடைப்படலாம் என்ற நிலையில் இருந்தார்கள். அதிகளவு தண்ணீர் குடித்து கஞ்சல்கள் சேறுகள் எல்லாம் தண்ணியுடன் சேர்ந்து வயித்துக்குள் போயிருந்தது. சுவாசப்பைக்குள் சேறு, சுரி கலந்த தண்ணீர் எல்லாம் போய் பெரும் நெருக்கடியான நிலையில் இருந்தார்கள்.

இப்படியான நிலையில் இருப்பார்கள் என்று நான் நினைத்துப் போகவே இல்லை. உடனடியாக அம்புபாக்கை குடுத்து செயற்கை சுவாசத்தைக் குடுத்துக்கொண்டு ரத்தத்தில இருக்கிற ஒட்சிசனின் அளவைப் பார்த்தேன். ஒட்சிசன் நல்லாய் குறைஞ்சு போய் சையினேசிஸ் என்ற நிலைக்கு வந்திருந்தது. அவ்களின் உடல்கள் எல்லாம் குளிர்ந்து விறைத்துப் போய் உடல் நீலம் பாரிச்ச நிலையில் இருந்தது. அவர்களுக்கு ஒட்சிசனையும் கொடுத்து ஓரளவு இயல்பு நிலைக்குக்கொண்டு வந்துவிட்டோம். அந்த இடத்தில் முழுமையாக தேறக்கூடிய நிலைக்குக் கொண்டுவர முடியாது. அதால சுவாசத்தைக் கொடுத்தபடி மோசமான நிலையில் வந்தவர்களை ஓரளவான நிலையிலும், ஓரளவான நிலையில் வந்தவர்களை சீரான நிலையிலும் உடனடி மருத்துவ தேவைகளை நிறைவு செய்து முதலாவது தொகுதி ஆட்களை வைத்தியசாலைக்கு அனுப்பி விட்டோம்.

கடலுடன் அடிபட்டு வந்தவர்கள் எல்லோரும் மோசமானநிலையில் தான் வந்தார்கள். இதைப்பார்த்த உடனேயே நாங்கள் கொண்டு வந்த மருந்துப்பொருட்கள் போதாது இவற்றை வைத்து இனி எதுவுமேசெய்யமுடியாது என்கின்ற நிலைக்கு வந்துவிட்டோம்.

அப்படி இருக்க முல்லைத்தீவு நகரப்பகுதி அழிவுக்குள் இருந்து தமிழீழக் கடற்படைச் சிறப்புத் தளபதி சூசை அண்ணா தங்கட பக்கத்தில தான் கனக்கக் காயக்காரர் இருக்கினம் உடனடியாக உதவிவேணும் என்ற தகவலை அனுப்பிக்கொண்டிருந்தார்.

இந்த நிலையில் எங்களுக்கான மருந்துப்பொருட்களின் தேவைஅதிகரித்தது. வந்து கொண்டிருந்த காயக்காரரின் தொகையும் வெகுவாக அதிகரித்துக்கொண்டிருந்தது.

உடனடியாக அவர்களுக்கு வழங்கவேண்டிய சகல வைத்தியத் தேவைகளையும் மேற்கொண்டு மோசமான நிலையில் இருந்தவர்களுக்கான விசேட சிகிச்சைகளை மேற்கொண்டு காவல்துறையினரது வாகனங்களிலும் அம்புலன்ஸ் வாகனங்களிலும், போராளிகளின் வாகனங்களிலுமாக ஏற்றி அனுப்பிக்கொண்டிருந்தோம்.

நாங்கள் இந்த வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்க ஒரு சின்னக் குழந்தைப்பிள்ளை தண்ணி குடிச்சு மூச்சுத் திணறி ஆபத்தான நிலையில் வந்தது. அந்தப் பிள்ளைக்கு ஒட்சிசன் குடுத்து சீர்செய்து கொண்டு இருக்க காயப்பட்டவர்கள் வருகின்ற தொகை குறைந்துவிட்டது. இந்த இடைவெளியைப்பயன்படுத்தி நான்மேலதிக பொருட்களை எடுத்துவருவதற்காக எங்களுடைய தள மருத்துவமனைக்குப் புறப்பட்டேன்.

புறப்படும்போது ஆபத்தான நிலையில் இருந்த சிலரையும் ஏற்றிக்கொண்டு போய் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் கொடுத்துவிட்டு எங்கள் மருத்துவ முகாமில் இருந்த முக்கிய மருந்துப்பொருட்களை ஏற்றிக்கொண்டு மிக வேகமாக திரும்பி முல்லைத்தீவுக்குப் போனோம்.

நாங்களும் போக இரண்டு மூன்று உழவு இயந்திரங்களில் ஆபத்தான சூழ்நிலையில் பலர் வந்திருந்தார்கள். அவர்களில் கர்ப்பிணித்தாய்மாரும் குழந்தைகளும் அதிகமாக இருந்தார்கள்.

அவ்வாறு வந்த கர்ப்பிணித்தாய்மாரின் நிலை மிக மோசமாக இருந்தது. அவ்கள் என்ன நிலையில் வந்தார்கள்?,அவர்களை எப்படி மருத்துவப் போராளிகள் கையாண்டார்கள் போன்ற திகைப்பூட்டும் பதிவுகளை அடுத்தபகுதியில் தருகிறோம்.

தொடரும்...

# கிளி.பிரதி மாகாண சுகாதார சேவை பணிமனையில் மருந்துக் களஞ்சியம் இன்மையால் நெருக்கடி

## - களஞ்சியமமைக்க அரசு மறுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிமனையில் மருந்துக்களஞ்சியம் இல்லாமையின் காரணமாக மாவட்ட வைத்தியசாலைகளுக்கான மருந்து வகைகளை களஞ்சியப்படுத்துவதில் பிரதிமாகாண சுகாதார சேவை பணிமனையினர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த பல வருட காலமாக கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைகளுக்கென எடுத்துவரப்படும் மருந்துவகைகள் யாவும் மேற்படி பணிமனையிலுள்ள சாதாரண அறைகளிலேயே களஞ்சியப்படுத்தப்பட்டு வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு வந்ததுடன், தற்போதும் அத்தகைய நிலையிலேயே மருந்துகள் களஞ்சியப்படுத்தப்படுகின்றது

இதன் காரணமாக குளிரூட்டப்பட்ட நிலையில் வைக்கப்படவேண்டிய மருந்து வகைகள் யாவும் மேற்படி பணிமனையில் களஞ்சியப்படுத்தப்பட முடியாதநிலை தோன்றியுள்ளது. இதன் காரணமாக முக்கியமான இம்மருந்து வகைகளை முழு அளவில் கிளி.மாவட்டத்திற்கு எடுத்துவரமுடியாத நிலை நீண்ட காலமாகவுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் கூட கிளி.மாவட்டத்திற்கென மருந்துக் களஞ்சியம் அமைப்பதற்கான நிதியையோ, அனுமதியையோ அரசு வழங்கவில்லை. சர்வதேச சுகாதார தொண்டர் நிறுவனங்கள் கூட மருந்துக்களஞ்சியத்தினை அமைத்துக்கொடுக்க முன்வரமாட்டார்களாவென சகலரும் தங்கள் ஆதங்கங்களைத் தெரிவித்துள்ளனர். (சோ)

## ஜே.வி.பி. அழைப்பு

நீர்வளத்தினை தனியார் மயப்படுத்தும் திட்டத்தினைத் தோற்கடிக்க மக்கள் இணைய வேண்டுமென விவசாய காணி நீர்வள அமைச்சரும், ஜே.வி.பியின் உறுப்பினருமான அனுரதிசா நாயக்க கேட்டுள்ளார்.

கடந்த பத்துவருடங்களாக நீர்வளத்தினைத் தனியார் மயப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ள அவர், சிறிலங்காவின் விவசாயத்தினை மட்டுமல்ல கலாச்சாரத்தினையும் சீரழிக்கும் முயற்சி ஒன்று நடைபெறுவதாகத் குற்றம் சாட்டியுள்ளார்.

# இனந்தெரியாதோரின் தாக்குதலில் புளொட் குழு உறுப்பினர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் புளொட் உறுப்பினரொருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயங்களுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் கொழும்பு கொண்டு செல்லப்பட்டார்.

கோவிந்தன் வீதியிலுள்ள மக்கள் வங்கிச் சந்தியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு நகரிலிருந்து ஈருருளியில் தனது அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த சமயம் உந்துருளியில் வந்த நபரொருவர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்த கணேஸ் எனப்படும் சந்திவெளியைச் சேர்ந்த கந்தையா கணேசராசா என்ற இந்நபர் மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து கொழும்பிற்கு கொண்டுசெல்லப்பட்டார்.

# சர்வதேச நாணய நிதியம் அவசர நிதியுதவி

ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குள்ளான சிறிலங்காவுக்கு அவசர நிதியுதவியாக சர்வதேச் நாணய நிதியம் 15 கோடி 75 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

இந்தத் தகவலை சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் வெளியிட்டுள்ளார். அவரது தகவலின்படி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாலைதீவிற்கு 63 லட்சம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டிருந்தது.

# சுனாமி நிவாரண நிதியில் மோசடி எம்.எச். முகமட் மீது குற்றச்சாட்டு

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச் முகமட் சுனாமி நிவாரண நிதியில் மோசடி செய்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் குற்றத் தடுப்புப் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட 40 மில்லியன் ரூபாய் நிதியில் 10 மில்லியன் ரூபாய்க்குரிய கணக்கீடுகள் இல்லாதமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு நிவாரணங்களுக்காக இந்த நிதி உதவி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

# ஊவா மாகாணத்தில் பரவியது பாரதூரமான நோயல்ல

## - விசேட ஆய்வில் கண்டறிவு

ஊவா மாகாணத்தில் பரவியுள்ளதாகக் கூறப்படும் அடையாளம் காணப்படாத நோய் தொடர்பில் விசேட ஆராய்ச்சி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.சுகாதார அமைச்சரின் பணிப்பின் பேரில் பதுளைப் பிரதேசத்திற்கு சென்ற தொற்று நோய் தொடர்பான வைத்திய நிபுணர் குழு ஒன்று இந்த ஆராய்ச்சியை நடத்தியுள்ளது.

பரவியுள்ள இந்த நோய் தொடர்பாக ஆராய்ச்சியை நிகழ்த்திய வைத்தியக்குழுவின் அங்கத்தவரான வைத்தியர் மித்திரகுமார் தெரிவிக்கையில், இந்த நோய் பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் நோயல்ல எனக் கூறினார். எனவே இதனைப் பற்றிப் பெரிது படுத்தத் தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (32)

# ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி

## (துறைசார் ஆலோசனை வழங்குனர், நிர்மாணதாரர்)

## பணிநிலை வேண்டுகை

கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைகளிற்குத் தகுதியானவர்களிடம் இருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

* 01) கனிய அளவீட்டாளர் - Quantity Surveyor
02) கட்டட நிர்மாண மேற்பார்வையாளர் (ஆண்) - Building Supervisor
03) படவரைஞர் - Draftsman

* 01) மின்ஒட்டு வேலையாளா - Welder
02) மரவேலைப் பணியாளர் - Carpenter
03) இயந்திரம் திருத்துநர் - Mechanic
04) நாட்கூலி வேலையாளா - Labourer
05) காவலாளி - Watcher

* 01) மேசன் ஒப்பந்தக்காரா - Masontry Contractor
02) மரவேலை ஒப்பந்தக்காரர் - Carpentry Contractor

மேற்குறிப்பிட்ட பணிநிலைகளுக்குத் தகுதியானவர்கள் தமது தகுதிச்சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்விற்கு சமூகம் தரவும்.

நேர்காணல் நடைபெறும் இடம்:- ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி, 45A.கனகபுரம்,


காலம் :- 07.03.2005 (திங்கள்)

நேரம் :- காலை 09.00மணி தொடக்கம் மாலை 05.00மணி வரை

பணிப்பாளர்,
ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி,
45A, கனகபுரம் ,கிளிநொச்சி.

(சி.10870)


# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு-1979.08.19
இறப்பு-1998.03.07

**கப்டன் கடலரசன்**
**மு.யோகானந்தகுமார்**
**(டியூலன்)**

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு-1989.04.25
இறப்பு-2005.01.22

**ஸ்ரீஸ்கந்தராசா**
**யுவதீபா**
**செஞ்சோலை மாணவி**

நி.முகவரி மயிலிட்டி, 6ஆம் வட்டாரம்,
த.முகவரி 4ஆம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

*ஓர் கூட்டில் வாழ்ந்து வந்த இரு உறவு ஊர் கதறப் பிரிந்ததுவோ*
*பாரினிலே வாழ்வதற்கு காலனுக்குப் பொறுக்கலையோ*
*தேம்புகிறோம் உம்பிரிவால்*
*மீண்டுமொரு அவதாரம் கிடைக்காதோ உங்களுக்கு*

தீபாவின் இறப்பு நிகழ்விற்கு உதவி செய்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, 07.03.2005 நடைபெறவிருக்கும் இருவரது நினைவஞ்சலி நிகழ்வின் மதியபோசனத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள். செஞ்சோலைக் குடும்பம், அறிவுச் சோலைக் குடும்பம் மற்றும் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்

-குடும்பத்தினர் (5768) சி.வீரையன் (முரளி) போராளி.


# ஜார்க்கண்ட் கோவா, மாநில அரசியல் பிரச்சினையால்

# டில்லி நாடாளுமன்றம் புதன் வரை ஒத்திவைப்பு

ஜார்க்கண்ட் , கோவா மாநில அரசியல் நிகழ்வுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாலாவது நாளாக நேற்று முன்தினமும் நாடாளுமன்ற இரு அவைகளிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து முதலில் பிற்பகல் வரை ஒத்திவைக்கப்பட்ட இரு அவைகளும் பின்னர் வரும் புதன்கிழமை வரை ஒத்திவைக்கப் பட்டது. மக்களவை கூடியதும் ஜார்க்கண்ட்,கோவா ஆளுனர்களைமாற்ற வேண்டும்என்று எதிர்க்கட்சித்தலைவர் எல்.கே. அத்வானி தலைமையில்தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் உறுப்பினர்கள் கடும்குழப்பம் விளைவித்தனர்.

அதன் பிறகு அவைத்தலைவரின் இருக்கைக்கு அருகே சென்று அரசுக்கு எதிராக தே.ஜ கூட்டணி எம்.பிக்கள் கோஷமிட்டனர் அமளியை கைவிடுமாறு பல முறை அவைத்தலைவர் சோமநாத் சட்டர்ஜி வேண்டுகோள் விடுத்தார்.. அவரது வேண்டுகோளை நிராகரித்த எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். இந்த கடுமையான குழப்பத்தைக் கட்டுப்படுத்த முடியாத அவைத்தலைவர் வரும் புதன்கிழமை வரை சபையை ஒத்தி வைத்தார்.

## ஹரியானாவில் புதிய முதல்வர் பூவிந்தர்சிங்ஹிடா பதவியேற்பு



ஹரியானா மாநிலத்தில் புதிய முதல்வராக காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த பூவிந்தர்சிங்ஹிடா நேற்றைய தினம் பதவியேற்றார்.

இறுதியாக நடைபெற்ற ஹரியான மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ்கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்ற நிலையில் புதிய முதல்வராக பூவிந்தர்சிங் ஹிடா பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க மாணவிகள் இந்திய சிறுவர்களுடன் ஆடிப்பாடினர்

(சென்னை)

சென்னைக்கு கப்பலில் வந்த அமெரிக்க மாணவிகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட பட்டினப்பாக்கம் பாடசாலைக் குழந்தைகளுடன் ஆடிப்பாடி உற்சாகப்படுத்தினார்கள்.

அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்களில் சில கற்கை நெறிகளைப் படிக்கும் மாணவ-மாணவிகள் தங்கள் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக பல்வேறு நாடுகளுக்குச் சென்று அந்த நாட்டின் கலாசாரம், பண்பாடு, வரலாறு போன்றவைகளைக் கற்க வேண்டும்.

இதன்படி ஆறுமாதத்திற்கு ஒரு குழுவினர் இந்தியாவுக்கு வருகிறார்கள். இவர்கள் சென்னை மதுரை, கேரளா, டில்லி உட்பட பல இடங்களுக்குச் சென்று நேரில் பார்வையிடுகின்றனர். அமெரிக்காவின் பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 47 மாணவ-



மாணவிகள், பேராசிரியர்கள் நேற்று முன்தினம் எம்.வி.எக்ஸ் புளோரர் கப்பல் மூலம் சென்னை வந்து பட்டினப்பாக்கம் பாடசாலையில் தங்கியுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமியரை உற்சாகப்படுத்தும் வகையில் அவர்களுடன் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

# காஷ்மீரில் தொடர் பனிப்பொழிவு இறந்தோர் தொகை முந்நூறைத் தாண்டியது

"ஜம்முகாஷ்மீரில் தொடர்ந்து பெய்துவரும் பனியினால் பனிப்பாறை சரிவுகளில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 300ஐத் தாண்டியுள்ளது. ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. ஆயிரத்து 800 பேர் காயம் அடைந்துள்ளனர்" என அம்மாநில வருவாய்த்துறை அமைச்சர் முகமது யாசின் தெரிவித்தார்.

இது குறித்து முகமது யாசின் கூறுகையில் "காஷ்மீரில் பனிப்பாறைச் சரிவுகளில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. பலியானோரின் எண்ணிக்கை இதுவரை 300ஐத் தாண்டியுள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும். மேலும் ஆயிரத்து 800இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அல்லது உடல் ஊனமடைந்துள்ளனர். ஒரு கிராமத்தில் மட்டும் பலியானோரின் எண்ணிக்கை 160ஆக உயர்ந்துள்ளது. பல்வேறு மாவட்டங்களிலும் பலியானோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன" என்றார்.

# ஆந்திராவில் தீவிரவாதிகள் தாக்கு

ஆந்திராவில் பலசரக்குக் கடைக்காரர் ஒருவரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர். மற்றொரு சம்பவத்தில் அரசு பேருந்து உட்பட மூன்று வாகனங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

ஆந்திராவில் ஆன்கரோனி கிராமத்திற்குள் கடந்த புதன் கிழமை தீவிரவாதிகள் அதிரடியாக நுழைந்தனர். தம்மைப்பற்றிப் பொலிசாரிற்கு உளவு சொன்னதாகக் கூறி ஜனார்த்தனன் என்ற பலசரக்குக் கடைக்காரரைச் சுட்டுக் கொன்றனர். சம்பவ இடத்திலேயே அவர் பரிதாபமாக இறந்தார்.

இதேபோல் மெகபூப்நகர் மாவட்டத்தில் வாடவெரலப்பள்ளி கிராமத்தில் சென்று கொண்டிருந்த அரசுபேருந்தை தீவிரவாதிகள் நிறுத்தினர். உள்ளே இருந்த பயணிகளை வெளியேறும்படி கேட்டுக் கொண்டனர் பின்னர் பேருந்தை தீவைத்துக் கொளுத்தினர். பின்னர் கொக்கக் கோலா குளிர்பான நிறுவனத்திற்கு உரிய இரண்டு வாகனங்களையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

# கம்யூனிஸ்ட்டுகளை திருமணம் செய்யாதீர்!

## கேரள முஸ்லிம்களுக்கு கடும் உத்தரவு

கேரளா மலப்புரம் பகுதியில் கம்யூனிஸ்ட்டுகளை திருமணம் செய்யத் தடை விதித்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உத்தரவு பிறப்பித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநில 18 ஆவது மார்க்சிஸ்ட் மாநாடு மலப்புரத்தில் நடந்தது. இதையடுத்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் பஞ்சாயத்து கமிட்டி, அப்பகுதி முஸ்லிம்களுக்கு உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது. 'இனி முஸ்லிம்கள் யாரும் கம்யூனிஸ்ட்டுகளை திருமணம் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் அவர்களது வாரிசுகளுக்கு சொத்து வழங்கக் கூடாது மசூதிகளில் அவர்களது இறுதிச் சடங்குகளைச் செய்ய அனுமதி கிடையாது' என்று அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கேரளாவில் ஆளும் காங்கிரஸ் கூட்டணியில் இரண்டாவது பெரிய கட்சியாக இருந்து வருகிறது குறிப்பிடத்தக்கதாகும்.

## உலங்குவானூர்தி விபத்தில் ஒருவர் பலி

ஆந்திரா மாநிலத்தின் மேதக் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை உலங்குவானூர்தி விழுந்து நொருங்கியதில் பயிற்சி விமானி உயிரிழந்தார். ஹக்கீம்பே விமானப் படைத் தளத்தில் மூன்று இருக்கை கொண்ட இந்த உலங்குவானூர்தியில் விமானி வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். உலங்குவானூர்தி சரியாக பவாண்டா மலைக்குன்றுக்கும் சர்லபள்ளி கிராமப்பகுதிக்குமிடையில் விபத்துக்குள்ளானது. பயிற்சியில் ஈடுபட்ட விமானி உயிரிழந்தார்.

# கோவாவில் குடியரசுத் தலைவர் ஆட்சி


பிரதாப் சிங்ரானே

இந்தியா கோவா மாநிலத்தில் சட்டப் பேரவையை தற்காலிகமாக முடக்கிவைத்து விட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியை பிரகடனம் செய்ய மத்திய அமைச்சரவை முடிவுசெய் திருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கோவா சட்டப் பேரவையின் நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதாப் சிங்ரானே தலைமையிலான காங்கிரஸ் அரசு வெற்றிபெற்ற சிலமணி நேரத்தில் மத்திய அரசால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

## 31ஆம் நாள் நீங்காத நினைவில்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 21 | 05 |
| 03 | 02 |
| 1930 | 2005 |

### சுப்பையா அன்னம்மா

காலமெல்லாம் எம்மோடு
களிப்புடனே உறவாடிய
எங்கள் குலத் தலைவியே
அனைவரையும் அன்புடனே
அரவணைத்து அன்னமிட்ட
அன்னையே உங்கள் பிரிவால்
எல்லோரும் சொல்லொணாத்
துயரடைகின்றோம்-உங்கள்
ஆத்மா சாந்தியடைய
வேண்டி நிற்கின்றோம்.

2005.02.05ஆம் திகதி காலமானவரின் அந்தியேட்டி 2005.03.07 ஆம் திகதி நடைபெறும்.

தகவல்:-
சு.மனோகரன் (மகன்)
ஜெயபுரம் வடக்கு
(சி-11542)

மக்கள், மருமக்கள்,
மைத்துனி,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.




சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட Japan Sony, T.V க்கள் (19'', 20'', 21'', 25'', 29'', Q21, T.21) மற்றும் VEDIO டெக்.செட்டப் ரேடியோக்கள்.(Sony,Pioneer,Kenwood) RX, FH ரேடியோக்கள் அம்பிளிபயர் என்பன மலிவான விலையில் உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.

ஷண் மல்ரிட் ரேட் சென்ரர்

SHAN MULTI TRADE CENTRE

150,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 7442




(சி-11457)

# ஐந்தாவது ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து மண் கௌவியது



நியூசிலாந்துடனான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்தை அவுஸ்திரேலியா 122 ஓட்டங்களால் வென்றுதொடரை ஐந்துக்கு பூச்சியம் என்ற கணக்கில் கைப்பற்றியது.

நேற்று மக்லின் பார்க்கில் நடைபெற்ற ஐந்தாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 50 ஓவர் முடிவில் ஐந்து விக்கெட்டுக்களை மட்டு மிழந்து 347 ஓட்டங்களைப் பெற்றது அணித் தலைவர் றிக்கி பொண்டிங் 127 பந்துகளை சந்தித்து 10 பவுண்டரிகளுடனும் ஐந்து சிக்ஸர்களுடனும் ஆட்டமிழக்காமல் 141 ஓட்டங்களைக் குவித்தார். உபதலைவர் கில்கிறிஸ்ட் 61 பந்துகளில் 91 ஓட்டங்களைப்பெற்றார்.

பதிலுக்கு 348 என்ற பாரிய வெற்றியிலக்கை அடைய துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 225 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. அவ்வணியின் கிரேக் மக்மிலன் மட்டுமே அதிக பட்சமாக 63 ஓட்டங்களைப்பெற்றார். பிளமிங், மக்கெலம் முறையே 35,36 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ஜெப்விப்சன் காயம் காரணமாக இப் போட்டியில் பங்கேற்கவில்லை. கிறிஸ் ஓயான்ஸ் ஒருபந்து கூட வீசாமல் பார்வையாளர் அரங்கிற்குத் திரும்பினார்.

அவுஸ்திரேலியா சார்பில், சைமன்ஸ் இரண்டு விக்கெட்டுக்களையும் கஸ்ப்ரோவிச் மூன்று விக்கெடடுக்களையும் மக்ராத், லீ இருவரும் தலா ஒரு விக்கட்டை யும் வீழ்த்தினர்.

இந்தத் தொடரில் ஐந்து போட்டிகளிலும் தோல்விகண்டதால் நியூசிலாந்து தரவரிசையில் சிறிலங்காவை விட பின்தள்ளப்பட்டது. அத்துடன் 2007 உலகக்கிண்ணத்தொடரில் இந்திய குழுவில் அல்லாது இங்கிலாந்து அணியின் குழுவிலேயே ஆடும் நிலை உருவாகியுள்ளது.

# இந்.பாக் டெஸ்ட் போட்டி; பார்வையிட முஷாரப் விருப்பம்

நாளை மறுதினம் இந்தியாவில் ஆரம்பமாக விருக்கும் பாகிஸ்தானுடனான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளை கண்டுகளிக்க இந்தியாவுக்கு விஜயம் செய்ய பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு கிரிக்கெட்சபைத் தலைவராகவும் பணியாற்றும் முஷாரப் 14 ஆண்டுகளுக்குப்பின் கடந்த ஆண்டு பாகிஸ்தானில் நடைபெற்ற இந்திய பாகிஸ்தான்போட்டிகளையும் கண்டு களித்தார்.

இது பற்றி அவர் தெரிவிக்கும் போது தனக்கு அனைத்து விளையாட்டையும் பார்க்கப் பிடிக்கும் என்றும் கிரிக்கட் ஆட்டத்தையும் விட்டுவைப்பதில்லை என்றும் தெரிவித்துள் ளார்.

எனினும் இந்தியா அழைப்பு விடுத்தால் மட்டுமே அங்கு செல்வதாகவும் இதுவரை அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் முஷாரப் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

**- டேவிஸ் கோப்பை டெனிஸ் -**

# குரூப் 1 போட்டியில் இந்தியா முன்னணியில்

டேவிஸ் கோப்பை டென்னிசில் ஆசியா-ஓசியானியா குரூப் 1' ஆட்டத்தில் இந்தியா -சீனா அணிகள் மோதும் ஆட்டம் டில்லியில் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் தொடக்க ஒற்றையர் ஆட்டத்தில் இந்திய வீரர் ஹார்ஷ் மன்காட் வெற்றி பெற்றார்.


2-ஆவது ஒற்றையர் ஆட்டம் ஒன்று நடந்தது. இதில் இந்திய வீரர் பிரகாஷ் அமிர்தராஜ் 6-3, 6-4,6-2 என்ற நேர் செட் கணக்கில் வாங்யூவை (சீனா) தோற்கடித்தார். இதன் மூலம் இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

**-துபாய் ஓபன் டெனிஸ்-**

# இறுதிப்போட்டியில் யாங்கோவிக்-டெவன்போட

செரினாவில்லியம்சின் கையில் காயம் ஏற்பட்டதையடுத்து துபாய் ஓபன் டென்னிஸ் இறுதிப்போட்டியில் ஜெலினாயங்கோவிக்கை லிண்சே டெவன்போட் எதிர்த்து ஆடுவார்.

இவர் அண்மையில் நோய் வாய்ப்பட்டு இருந்து துபாய் போட்டிகளுக்கு திரும்பினார். அத்துடன் இப்போட்டியில் சுவிஸின் பெட்டி ஸ்க்னைடரை 4-6,7-5, 6-1 என்ற செட்கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு தெரிவானார்.. எந்தவித வருத்தமானாலும் ரசிகர்கள் முன்னால் அதனை காட்டிக் கொள்ளாது இயன்றளவு போட்டியில் கவனம் செலுத்தவேண்டும். அத்துடன் எனது தரவரிசையையும் பாதுகாக்கவேண்டுமென டெவன்போட் தெரிவித்துள்ளார்.




# ஜக்கலிஸ் சாதனை

தென்னாபிரிக்க வீரர் ஜெக்காலிஸ் நேற்று புதிய சாதனை படைத்தார். டெஸ்ட் போட்டியில் குறைந்த பந்தில் அரை சதம் அடித்து அவர் சாதனை புரிந்தார். காலிஸ் 24 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்தார்.

இதற்கு முன்பு இங்கிலாந்து வீரர் போத்தம் 1981 ஆம் ஆண்டு 26 பந்துகளில் சதம் அடித்ததே சாதனையாக இருந்தது.

டெஸ்ட்போட்டியில் குறைந்த பந்தில் அரைச்சதம் அடித்த முதல் 5வீரர்கள் வருமாறு:-

காலிஸ் (தென்னாபிரிக்கா)-24 பந்து

போத்தம் (இங்கிலாந்து) -26 பந்து

யூசுப் யோகனா (பாகிஸ்தான்) 27 பந்து

கபில்தேவ் (இந்தியா) 30 பந்து

குரோஞ்சி (தென்னாபிரிக்கா) 31 பந்து

# தென்னாபிரிக்கா-சிம்பாப்வே முதல் டெஸ்ட் நெருக்கடியில் சிம்பாப்பே



நேற்று முன்தினம் கேப்டவுனில் ஆரம்பமான தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல்நாள் ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்கா முதல் இனிங்சில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 340 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது. முன்னதாக தனது முதல் இனிங்சை ஆடிய சிம்பாப்வே 54 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. தென்னாபிரிக்கா சார்பாக கிரேம்ஸ்மித் 121 ஓட்டங்களையும் ஜக்ஸ் றுடோல்ப் 49 ஓட்டங்களையும், ஜக்கலிஸ் 24 பந்துகளில் அரைச்சதம் பெற்று ஆட்டமிழந்தனர். இந்த மூன்று விக்கட்டுக்களையும் சிம்பாப்வேயின் கிரேம் கிரேமர் (3-86) பெற்றார். டடன்டா தைபு சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும் தனது டெஸ்ட் வரலாற்றில் 1000 ஓட்டங்களை கடந்த வரானார்.

தென்னாபிரிக்காவின் மக்காயா என்டினி 200டெஸ்ட் விக்கட்டுக்களை கடந்தார்

இதில் ஜக்கலிஸ், என்டினி, ஷோன் பொலக் ஆகியோர் முறையே 4,3,3விக்கட்டுக்களை வீழ்த்தினர்.

### "உதைபந்தாட்டப் பயிற்சிகள்" நூல் வெளியீடு

யாழ்.மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் "உதைபந்தாட்டப் பயிற்சிகள்"என்ற நூல் எதிர்வரும் ஒன்பதாம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.யாழ்.மத்திய கல்லூரி அதிபர் கே.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேசும்,தமிழீழ விளையாட்டுதுறைப் பொறுப்பாளர் பாப்பா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார்.

# பாடசாலை மெய்வன்மைப் போட்டிகள்

## உடையார் கட்டு குரவில் த.வி.

உடையார்கட்டு குரவில் தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் அதிபர் மேகநாதன் தலைமையில் நடைபெற்றது. இந். நிகழ்வின் பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் பரமேஸ்வரன் கலந்து சிறப்பித்தார். இல்ல மெய் வன்மைப் போட்டியில் நாவலர் இல்லம் 445 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் விவேகானந்தர் இல்லம் 437 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றது. இந் நிகழ்வில் மக்கள் பொது அமைப்புப் பிரதிநிதிகள், போராளிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (19)

## கிளி. புனித பற்றிமா றோ.க.வி.

கிளி.புனித பற்றிமா றோ.க.வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நேற்று (05.02.2005) சனிக்கிழமை பி.ப.2.00 மணியளவில் நடைபெற்றது.



பாடசாலை அதிபர் அருட்சகோதரி திரேசம்மா சில்வா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசியக் கொடியினை பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் சூசைதாசன் ஏற்றிவைத்தார். இப்போட்டியில் 474 புள்ளிகளுடன் ஞானப்பிரகாசர்(மஞ்சல்) இல்லம் முதல் இடத்தையும், 471 புள்ளிகளுடன் விவேகானந்தர் இல்லம் (பச்சை) இரண்டாம் இடத்தையும்,462 புள்ளிகளுடன் தனிநாயகம் இல்லம் (நீலம்) மூன்றாமிடத்தையம் பெற்றுக்கொண்டன. ஆசியர் சுவேந்திரராசா நன்றியுரை வழங்கினர்.

**கேணல் கிட்டு நினைவு கால்பந்தாட்டப்போட்டி**

# கிளிநொச்சி,திருமலை, மன்னார் கழக அணிகள் நேற்றைய ஆட்டத்தில் வெற்றி

(அலுவலக செய்தியாளர்)

கேணல் கிட்டு நினைவாக எட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்றுக் காலை 9.00 மணியளவில் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமான மேற்படி பேர்ட்டியின் முதல் போட்டிக்கு கிளிநொச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகமும், மட்டக்களப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகமும் தெரிவாகி இருந்தது. இப் போட்டியில் பங்கு பற்றிய வீரர்களை சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் சிறப்புத் தளபதி லெப்டினன்ட்.கேணல் நகுலன் அறிமுகம் செய்துவைத்தார்.



லக்கிஸ்ரார் அணி

தொடர்ந்து போட்டியில் இறங்கிய லக்கிஸ்ரார், விக்கினேஸ்வரா அணிகளில் லக்கிஸ்ரார் அணி 4-0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

மாலை நடபெற்ற போட்டியில் திருகோணமலை பிக்பூட் அணியும், முல்லைத்தீவு வித்தியா அணியும் போட்டியில் இறங்கினர். இதில் பிக்பூட் அணி5-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.


அடுத்து நடைபெற்ற மன்னார் புனித ஜோசப்



புனித ஜோசப் அணி

அணிக்கும் வவுனியா மருதநிலா அணிக்கும் நடைபெற்ற போட்டியில் புனித ஜோசப்அணி 4-0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

அத்தோடு இன்று நடைபெறும் போட்டிகள் யாவும் முற்கூட்டியே அனுப்பப்பட்ட சுற்றறிக்கையின் நேர ஒழுங்கின் படி குறிப்பிட்ட கழகங்களுக்கு இடையில் போட்டிகள் நடைபெறுமெனவும் தெரிவித்துள்ளனர். (கு)



## சிந்தனைக்கு

கல்வி எனும் மூலாதார உரிமையைப் பறித்தெடுத்து, தமிழீழத்தின் கல்வித் துறையைச் சிதைத்துவிட, சிங்களப் பேரினவாதம் நீண்டகாலமாகவே முயன்று வருகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 06-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# அவர்கள் மாறவில்லை

சிறிலங்கா அரச தரப்பில் எவருமே மாறியதாக இல்லை. சிங்கள அரசியல்வாதிகள் இன்னமும் இனவாதிகளாகவே உள்ளனர். ஆயுதப்படையினரும் ஆக்கிரமிப்பாளர்களாயுமே தொடர்ந்து இருந்து வருகின்றனர்.

அரசியலை பொறுத்து காலத்திற்குக் காலம் தலைமைத்துவம் மாறுகின்றது. ஆனால் ஆட்சியாளர்களின் கொள்கை மாறியதாக இல்லை. இது தனியாக ஆட்சியிலுள்ள கட்சிகளுக்கு மட்டும் பொருத்தப்படானதொன்றல்ல இது சகல ஆட்சியாளர்களுக்கும் பொருத்தப்பாடானது. இதில் வலதுசாரிகள், இடது சாரிகள் என்ற பேதம் கிடையாது.

இதில் ஒரளவு ஆடி அடங்கிவரும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இருக்கையில் ஜே.வி.பி. பௌத்த - சிங்களப் பேரினவாதத்திற்கு அரசியல் தலைமை கொடுக்க முற்படுகின்றது. அதில் கணிசமான அளவில் முன்னேற்றமும் கண்டு வருகின்றது.

இதேவேளை ஜே.வி.பி. தனது தலைமைத்துவத்திற்கு அங்கீகாரம் பெறும் பொருட்டு மேற்கொள்ளும் நடவடிக்கையே இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை சுனாமி அனர்த்த நிதிசெலவீட்டிற்கான பொதுக் கட்டமைப்பு என்பவற்றிக்கு காட்டி வரும் எதிர்ப்பும், திருமலைநகரில் ஏற்படுத்தி வரும் குழப்பமும் ஆகும். கடந்த காலத்தில் இத்தகைய வழி முறைகளையே ஒவ்வொரு சிங்களத் தலைமைத்துவமும் காலத்திற்குக் காலம் கைக் கொண்டன.

இந்த வகையில் அரசியல் தலைமை மாறியும், ஆளும் கட்சி மாறினும் அரசியற்கட்சிகளிடம் மாற்ற முடியாத தொன்றாக இருப்பது இனவாதச் சிந்தனையே ஆகும். இவ்வாறானதொரு நிலைக்கு இனவாதத்தை மட்டுமே நம்பி இவர்கள் அரசியலை நடத்த விளைகின்றமையே ஆகும்.

எவ்வாறு அரசியல் வாதிகளின் சிந்தனைகள் மாறாது இருக்கின்றதோ அதே ஒத்த உணர்வுடனும் மனோநிலையுடனுமே சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பும் உள்ளது. ஆயுத படைத்தரப்பை பொறுத்துத் தாங்கள் ஆள்பவர்கள் தமிழர்கள் ஆளப்படுவர்களாயும் உள்ளனர்.

இவர்களிடம் காணப்படும் இத்தகைய உணர்வே தமிழ் மக்களின் உயிர், உடமைகள் குறித்து அவர்கள் எத்தகைய அக்கறையும் காட்டாமைக்கு காரணமாகும். இதன் வெளிப்பாடுகளில் ஒன்றாகவே அடிக்கடி அவர்களின் வாகனங்கள் வீதியில் செல்லும் அப்பாவி தமிழ் மக்கள், மாணவர்கள் மீது மோதுகின்றன. அதாவது ஆயுதப்படைத்தரப்பிற்கு கட்டுப்பாட்டு உணர்வு எதுவும் இல்லாமையே காரணமாகும்.

அது மாத்திரமன்றி ஆயுதப்படைத்தரப்பின் செயலுக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலையில் ஆயுதப்படைத்தரப்பு தனது குற்றங்களுக்காக மன்னிப்போ, வருத்தமோ தெரிவிப்பதும் இல்லை. மாறாக மக்களின் போராட்டங்களுக்கு எதிரான நடவடிக் கையில் ஈடுபடுவதே வழமையாகியுள்ளது.

எடுத்துக்காட்டாக நேற்று யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 12 வயதுமாணவி ஒருத்தியை உழவு இயந்திரத்தால் மோதிக் கொன்றதைக்கண்டித்து மக்கள் வீதி மறியலில் ஈடுபட்டபோது. அதனை முறியடிப்பதற்கு இராணுவம் வன்முறையையே பயன்படுத்தியது. அதாவது சாத்வீக ரீதியிலான எதிர்ப்பை முறியடிக்க அது ஆயுதங்களைக்கையில் எடுத்தது. இது மேலும் ஒருவர் கொல்லப்படவும், இருவர் காயப்படவும் காரண மாகியது.

கடந்த கால வரலாறும் இத்தகையதே அதாவது தமிழ் மக்கள் சாத்வீகரீதியிலும், அமைதியான வழியிலும் தமது உரிமை களைக் கோரியபோது, சிங்கள ஆட்சியாளர்கள் ஆயுதப்படைகளையும், குண்டர்களையுமே பயன்படுத்தின. இதுவே நீண்ட யுத்தமும், பெரும் அழிவும் எற்படக் காரண மாகியது. இலங்கை இருநாடுகளாக பிளவுபடக் கூடிய சூழ்நிலை யும் உருவாகியது.

ஆனால் இதன்பின்பும் சிங்கள ஆட்சியாளர்களும் சரி, அதன் ஆயுதப்படையினரும் சரி தமது நிலைப்பாட்டையும் போக் கையும் மாற்றிக் கொண்டதாக இல்லை. அரசியல் வாதிகள் இனவாதிகளாக தமிழர்களின் உரிமைகளை அபகரிப்பவர்களாயும் ஆயுதப்படையினர் ஆக்கிரமிப் பாளர்களாக, ஒடுக்கு முறைக்கருவிகளாகச் செயற்படுப வர்களாயும், உள்ளனர். இத்தகைய தமது போக்கை இவர்கள் மாற்றாத வரை இலங்கையில் அமைதியான சூழ்நிலை என்பது சாத்திய மானதாக இருக்குமா? என்பது கேள்வியே.

# முஸ்லிம் மையவாடியை மாசுபடுத்துவது குறித்து கண்காணிப்புக் குழுவிடம் எழிலன் முறையீடு

(திருமலை)

புல்மோட்டைக் கிராமத்தில் முஸ்லிம்களின் மையவாடியை மாசுபடுத்தும் முயற்சியை உடனடியாகத்தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எஸ்.எழிலன் திருகோணமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு முறையிட்டுள்ளார். முஸ்லிம் மையவாடிக்குள் படையினர் பிரவேசித்து மண்டை ஓடு மற்றும் மனித எச்சங்களைத் தோண்டி அகற்றும் சம்பவம் அம்பலமானதை அடுத்து புல்மோட்டை முஸ்லிம் பிரமுகர்கள் நேராகவும், அப்பிரதேச விடுதலைப்புலிகள் பொறுப்பாளர் ஊடாகவும் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனுக்கு முறையிட்டனர். அதனை அடுத்தே எழிலன் போர்நிறுத்தக்கண் காணிப்புக்குழுவின் அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்தார். முஸ்லிம் மக்கள் புனிதமாகக் கருதும் மையவாடிக்குள் பிரவேசித்து புதைக்கப்பட்ட மனித சடலங்களின் எச்சங்களை அகற்றுவது அம் மக்களின் உணர்வுகளை அவமதிக்கும் செயலாகும். இவ்வாறான செயல் கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் எழிலன் கண்காணிப்புக் குழுவிற்கு தெரியப்படுத்தியுள்ளார். (25)

# நிவாரணங்களுக்கான சுங்கத்தீர்வை நீக்கம் பொருட்களை தென்பகுதிக்கு விநியோகிக்கும் சதி

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண பொருட்களுக்கான சுங்கத் தீர்வைகளை நீக்கியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளமை உள்நோக்கம் உடையசெயல் என கொழும்புத்தகவல்கள் கூறுகின்றன. வடக்கு கிழக்கு பகுதிகளில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் புனர்வாழ்வு பணிகளுக்காக சர்வதேச தொண்டு நிறுவனங்களால் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பெருமளவு பொருட்கள் இலங்கை அரசாங்கத்தின் தீர்வை அறிவித்தலை அடுத்து பொறுப்பேற்கப்படாமல் விமான நிலையத்திலும் துறை முகத்திலும் தேங்கியுள்ளன. இந்தப் பொருட்களை உரிய அரச நிறுவனங்கள் ஊடாக கையாள்வதன் மூலம் இவற்றிற்கான தீர்வையினை செலுத்த வேண்டியதில்லை என்று அரசாங்கம் தற்போது அறிவித்துள்ளது. இந்தப் பொருட்கள் அரச நிறுவனங்கள் ஊடாக உள்வாங்கப்படும் போது அவை வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்படுமென அரச சார்பற்ற நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கென அனுப்பிவைக்கப்பட்ட இந்தப் பொருட்களை தெற்கில் உள்ள சிங்கள மக்களுக்கு விநியோகிப்பதற்கான சதி முயற்சியே இதுவெனவும் கூறப்படுகின்றது. (32)

# விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடத்த அரசாங்கத்தை வலியுறுத்துவோம்

### -அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள யோசனைகளை ஆராய்ந்து பார்த்து இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காணும் வரையான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு அராசங்கத்தை வலியுறுத்தப் போவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் அமைப்பின் பிரதித்தலைவர் அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தமது யோசனையை எதிர்வரும் செவ்வாய் கிழமை இடம்பெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மகளிர்மாநாட்டின் போது முன்வைக்கவுள்ளதாகவும் அவர் கூறினார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் மாநாடு தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது; விடுதலைப் புலிகள் தேசிய பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும்மென கேட்டுள்ளார்கள். இம்முறை தேசிய அனர்த்தத்தின்போது ஒரு சில இணக்கப்பாடுகளுடன் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட புலிகள் யோசனை முன்வைத்துள்ளனர். இந்த இணக்கப்பாட்டிற்கு வருமாறு நாம் அரசாங்கத்தை வலியுறுத்து கின்றோம். இறுதித் தீர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்தி இது தொடர்பாக தீர்மானம் ஒன்றை எடுத்து எஞ்சிய செயல்திட்டங்களுக்கு செல்லுமாறு மகளிர் அமைப்பு என்ற முறையில் அரசாங்கத்துடன் செயற்படவும் வலியுறுத்தவும் தாம் எண்ணியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோதமாக வெளிநாடு ஏற்றிச் செல்லும் அதிவேகப்படகு பொலிசாரிடம் சிக்கியது

சட்டவிரோதமான முறையில் சிலரை இத்தாலிக்கு அழைத்துச்செல்ல விருந்த அதிவேகப்படகொன்றை மாரவிலகப் பொலிசார் நேற்று அதிகாலை கைப்பற்றியுள்ளனர். அத்துடன் 52 பேருக்குச் சொந்தமான பயணப்பொதிகளையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இப்படகு ஹிக்கடுவப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு வருக்குசொந்தமானதென பொலிஸ் விசார ணைகளில் இருந்து தெரியவந் துள்ளது. தேடுதல் மேற்கொண்ட போது அங்கிருந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

# ஐ.நா. செயலாளர் நாயகம் பதவிக்கு ஜயந்த தனபால போட்டி

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பதவிக்கு போட்டியிடப் போவதாக இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. ஏசியான் ரிவியூ என்ற பத்திரிகை செய்தி வெளியிடுகையில் : மதிப்பு வாய்ந்த ராஜதந்திரியும், ஐ.நா.ஸ்தாபனத்தின் ஆயுதபரிகாரன விவகாரணங்களின் முன்னாள் செயலாளர் நாயகமுமான ஜயந்த தனபால நாட்டின் வேட்பாளராக போட்டியிடுவார் என வெளிவிவகார அமைச்சு சகல தூதரகங்களுக்கும் அறிவித்துள்ளது என தெரிவிக்கப் பட்டுள்ளது. இலங்கைத் தூதரகங்கள் அமைந்துள்ள நாடுகளில் தனபாலவை அந்நாடுகள் ஆதரிக்க வேண்டுமென கோரிக்கை விட வேண்டுமென வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. ஐ.நா.செயலாளர் நாகயம் பதவியிலிருந்து அடுத்த ஆண்டு கொபி அனான் விலக வுள்ளமை குறிப்பிடத் தக்கது.


# தப்பி ஓடமுயன்றாராம் கைதி பொலிசாரால் சுட்டுக்கொலை

ராகம நகரத்தில் நேற்று அதிகாலை பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பாதாள உலகக்குழு கோஷ்டியைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட நிலையிலிருந்த இவர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கழுத்தை நெரித்து தப்பிச்செல்ல முயன்றபோதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர். பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இந் நபர் காலி ரத்கம பிரதேசத்தில் மறைந்திருந்தபோது ராகம விசேட பொலிஸ் குழுவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின்

# கணக்கியல் தொழில் நுட்ப முகாமைத்துவ கல்லூரி திறந்துவைப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நிறுவப்பட்டுள்ள கணக்கியல் தொழில்நுட்ப முகாமைத்துவக் கல்லூரியொன்று நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் கிளிநொச்சியில் திறந்துவைக்கப் பட்டுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கணனித் தொழில்நுட்ப வியல் இணையத்தள இணைப பாளர் பிரபு தலைமையில் இத்திறப் புவிழா நிகழ்வு மங்கலவிளக் கேற்றலையடுத்து தேசியக் கொடி யேற்றலுடன் ஆரம்பமாகியது.



மங்கல விளக்கினை கிளி நொச்சி கந்தசுவாமி ஆலய பிரதமக் குருக்களான ரெட்ணேஸ்வராக் குருக்கள் அவர்களும் முகாமைத்துவக் கல்லூரியின் ஆசிரியர்களில் ஒருவரான சூ.அருள் நாதன் அவர்களும் ஏற்றிவைத்தனர். இதனையடுத்து தேசியக் கொடியினை சுனாமிப் பேரலை அனர்த்தநுரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர்களில் ஒருவரான வின்சன் அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து முகாமைத் துவக் கல்லூரியின் அலுவலகத் தை தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தின் துணை நிறைவேற்றுப் பணிப் பாளர் றீகன் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இலங்கை கணக்கீட்டுக் தொழில நுட்பவியலாளர் கழகப் பாட நெறிக்கமைவாக(ஒன்றரை ஆண்டு வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக் குட்பட்டதாக) ஆரம்பிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ வகுப்பறைகளில் ஒன்றினை சிறுவர் நலத் திட்டப் பணிப்பாளர் ரவி திறந்துவைக்க மற்றுமொரு இரண்டாவது வகுப்ப றையினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ்கிறிஸ்ரி திறந்துவைத் தார். இதனையடுத்து ஆசியுரை யும், சிறப்புரையும் இடம்பெற்றன. ஆசியுரையினை இரட்ணேஸ்வராக் குருக்களும் சிறப்புரையை திட்டமிடல் பணிப்பாளர் லோரன்ஸ கிறிஸ்ரியும் ஆற்றினர்.

## விபத்தில்...

தலைமையிலான அரசியல் துறைப் போராளிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள் மற்றும் இந்து முஸ்லிம் மதப் பெரியவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

வீதியின் இரு ஓரங்களிலும் சக பாடசாலை மாணவிகள் அணி வகுத்து நின்று கதறியழ பூதவுடல் தாங்கிய பேழை கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

இதனிடையே மாணவியின் பூதவுடல் அடக்கம் செய்யப்படும் வேளை யினில் வன்முறைகள் ஏதும் வெடிக்கலாமென்ற அச்சங் காரணமாக யாழ். பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் வாகனங்களில் பெரு ளை விலான பொலிசார் தயார் நிலையினில் வைக்கப்பட்டிருந்தனர்.

எனினும் வன்முறைகள் ஏதும் அற்ற நிலையில் அமைதியான முறையில மாணவியின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தது. (27)

## ஐ.ஓ...

பொன்றை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இலங்கை சனாதிபதி, பிரதமர், எதிர்கட்சித் தலைவர் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களை கொழும்பில் சந்திக்கவுள்ள பினிற்றா நாட்டின் தற்போதைய நிலைகுறித்து கலந்துரையாட விருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (32)

## வடபகுதி...

னைச் சேர்ந்த பிரதிநிதிகளுள் தமிழீழ அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களை சந்தித்து கலந்துரை யாடியுள்ளார்.

நேற்று மாலை 8.00 மணியள வில் நடைபெற்ற இக்கலந்துரை யாடலின் போது சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் நிலைப்பாடுகள் தொடர்பாகவும், தமிழ் முஸ்லிம் மக்களின் உறவு களைப் பேணும் முகமாகவும், பேசப்பட்டதாகத் தெரிய வருகிறது.

அத்தோடு இம் மதகுருமார் களுடன் முஸ்லிம் மதகுருக் கல்வியை பயின்று வரும் மாண வர்களும் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளரால் வரவேற்கப்பட்டனர். (ச)

## அரசியல்துறைப்...

கொண்டு வந்தீர்களா?

கடந்த முறை நாங்கள் செய்தியை அறிவிக்க வந்தோம். ஆனால் இப் பொழுது சுனாமி கூட்டு நடவடிக் கைக்கு நெருக்கமான ஆதரவு பற்றி நீண்ட நேரம் கலந்தாலோசித் தோம்.

*. சுனாமி இணை செயற் பாட்டுப் பொதுக் கட்டமைப்பை நிறுவது தொடர்பான முன்னேற்றம் என்ன?

இது தொடர்பாக நான் எந்த அறிவிப்பையும் விடவிரும்ப வில்லை. நாம் இன்று கலந்தாலோ சித்தோம் இது தொடர்பாகத் தொடர்ச் சியாகக் கலந்தாலோசிக்க உள்ளோம எனவும் மேலும் அவர் கூறினார். (ச,தீ)

## சாதாரண...

களும் மோதப்பட்டு கொல்லப்படு கின்ற சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இதன் பின்னால் உள்ள பிரச்சினைகளை ஆராய வேண்டும். குறுகிய ஒரு நிலப்பரப்பிற்குள் கூடுதலான இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பது கூடுதலான வாகனங்கள் மக்களின் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கும் கனரக வாகனங்களின் போக்குவரத்தும் கட்டுப்பாடற்ற வேகமும் தர நிர்ணயத்துக்கு அப்பாற்பட்ட இராணுவ வாகனங்களின் பாவனையும், கொல்லப்படுபவர்கள் தமிழர்கள் தானே என்ற மனோபாவ நிலையும் இராணுவ சாரதிகளின் அசமந்த நிலையுமே இவ்விபத் துக்களுக்கு காரணமாய் அமைகின்றன.

எனவே இந்த விபத்துக்களை நாம் சாதாரணமாக பார்க்க முடியாது. ஆகவே ஒப்பந்தத்தின் படி நகர்ப்புறங்களில் இருக்கின்ற மக்கள் போக்கு வரத்துக்கு அவசியமான தடைசெய்யப்பட்ட பாதைகள் திறக்கப் படவேண்டும். போக்குவரத்துக்குத் தடையாக இருக்கும் காவலரண்கள் அகற்றப்படவேண்டும். மக்கள் போக்குவரத்து நெருக்கமாக உள்ள இடங்களில் கனரக வாகனங்களின் போக்குவரத்து நிறுத்தப்படவேண்டும். விபத்துக்கள் நடைபெறாது இருக்க எந்த வித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமோ அவற்றை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளோம்.

பல்கலைக்கழக வாசலில் கொல்லப்பட்ட வயோதிபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பொலிசாரின் இலக்கத்தையும், கண்காணிப்புக்குழுவிடம் வழங்கியுள்ளோம். அதில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை அடையாளம் காட்ட முடியும் என்பதையும் தெரிவித் துக்கொள்கின்றோம். இறுதியில் மக்களைப் பாதிக்கின்ற மக்கள் உயிர் களைப் பலியெடுக்கின்ற சம்பவங்களும், விபத்து சம்பவங்களும் ஏற்ப டாமல் தடுக்கப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம். தொடர்ச்சியாக இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுமானால் மக்களுடைய உணர்வு களை கட்டுப்படுத்த முடியாதென்பதையும் தெரிவித்து சுட்டிக்காட்டி னோம் என்றார்.


**காணி விற்பனை**

கல்வியங்காடு சந்திக்கு அருகில் G.P.S வீதியில் விளையாட்டு மைதானத்தின் முன்பாக றம்மியமான சூழலில் சுத்தமான தண்ணீரைக்கொண்ட வளமுள்ள 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குயுண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(சந்திக்கும் நேரம் மாலை:5.30 P.M பின்பு)

(சி.11460)

**தொடர்புகளுக்கு:**
**38 இராசா வீதி**
**சட்டநாதர் கோவிலடி**
**நல்லூர், யாழ்ப்பாணம்**
**T.P0777499284**


# கடற்படை தலைமையக வாயிலுக்கருகே நடமாடினாராம்

### 14வயது தமிழ்ச் சிறுவன் கைது

சிறிலங்கா கடற்படை தலைமையகத்தின் பிரதான வாசலிற்கு அருகாமையில் சந்தேகத்திற்குரிய வகையில் நடமாடியதாகக் குற்றம் சுமத்தி 14 வயது தமிழ்ச் சிறுவனொருவர் சிறிலங்கா கடற் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இந்தச் சிறுவன் யாழ்ப்பாணம் கொக்குவில் வடக்கைச் சேர்ந்த பார்வதன் எனப்படும் வேலுதாஸ் கோபி எனக் கூறப்படுகிறது. இவர் மேலதிக விசாரணைக் காக கொழும்புத் துறைமுகப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## மாகாணக்..

பணிப்பாளர், இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது வடகிழக்கு மாகாண பாடசாலைகளின் அடிப்படைத்தேவைகளை நிவர்த்தி செய்தல், மாணவர்களின் கல்வி அபிவிருத்தி செய்தல், ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இச்சந்திப்பில் விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி பானு, மட்டு-அம்பாறைஅரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் உட்பட விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## படையினர்...

இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த தேடுதல் நடவடிக்கையின் போது எவரும் கைது செய்யப்பட வில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## புல்மோட்டை...

எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மையவாடியில் படையினர் சிலர் மண்டை ஓடுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்ததை அப்பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் கண்டு ஊரவர்களுக்கு தெரிவித்ததை அடுத்தே மையவாடி யிலிருந்து மனித எச்சங்களை அகற்றும் செயல் வெளியானதாக புல்மோட்டை வாசி ஒருவர் தெரிவித்தார்.

மையவாடிக்கு அருகில் இராணுவ முகாம் அமைந்துள்ளது

புல்மோட்டைப் பொலிசார் அந்த இடத்திற்கு விரைந்து சென்று பதற்ற நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முயற்சித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவித்தன. தோண்டி எடுத்த மண்டை ஓடு ஒன்றை அந்த இடத்தில் போட்டு விட்டு படைச் சிப்பாய் ஒருவர் அருகில் உள்ள முகாமுக்குள் ஓடிவிட்டார் என்றும் இப்போது புல்மோட்டைப் பொலிசார் மையவாடிக்கு பாதுகாப்பு வழங்கியிருப்பதாகவும் புல்மோட்டையிலிருந்து கிடைத்த பிந்திய தகவல் ஒன்று தெரிவித்தது. மையவாடியிலிருந்து மண்டை ஓடு தோண்டி எடுக்கப்பட்ட சம்பவம் வெளி யானதை அடுத்து புல்மோட்டை கிராமத்தில் உள்ள கடைகள் மூடப் பட்டன. மக்கள் ஆத்திரத்துடன் மையவாடியைச் சுற்றி வளைத்து நின்றனர். புல்மோட்டைக் கிராம வீதிகளில் டயர்கள் போட்டு எரிக்க, மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் மைய வாடியில் புதைக்கப்பட்ட சடலங்களின் மனித எச்சங்களை தோண்டி எடுப்பது நீண்ட நாட்களாக நடைபெற்று வந்துள்ளது என்று சந்தேகிக்கப்படுவதாக புல்மோட்டை பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். இதேவேளை புல்மோட்டை மையவாடிப்பிரதேசக்காணியில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட கொக்குளாயைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தை குடியமர்த்த மேற்கொள்ளப்படும் முயற்சியின் ஒரு கட்டமாக அப்பிரதேசத்தைச் துப்புரவு செய்து மனித எச்சங்கள் அகற்றப்படுகின்றன என்ற சந்தேகமும் சிறுபான்மை இன வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளது. (25)

# சாவு அறிவித்தல்

## திருமதி. நாகமுத்து சின்னப்பிள்ளை

### பிரதான வீதி காங்கேசன்துறை

பிரதான வீதி காங்கேசன்துறை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி. நாகமுத்து சின்னப்பிள்ளை 05.03.2005 சனிக்கிழமை காலமானார். அன்னார் நாகமுத்து (ஆயுர்வேத வைத்தியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு.கருணானந்தசிவம் (ஆசிரியர் நடேஸ்வராக்கல்லூரி) அவர்களின் அன்புத் தாயாரும், கலாவதியின் அன்பு மாமியாரும், சேரலாதன், மதுராந்தகன்(ஆசிரிய கலாசாலை கோப்பாய்), வேண்மாள் (போராளி சுடர்ச்செல்வி), திருமதி.றெசில்டா, திருமதி. பாமினி (ஆசிரிய கலாசாலை கோப்பாய்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காவியா, கரிகாலன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.03.2005 (இன்று) கயூத் தோட்டம் அ,பகுதி.தேவிபுரம் எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்**
**திருமதி. க.கருணானந்தசிவம்**
**(மருமகள்)**

(5802)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது